بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 13

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1445 ரமலான் 28★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - அமான் 28

★ 28 மார்ச் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا كُتِبَ عَلَيۡکُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيۡنَ مِنۡ قَبۡلِکُمۡ لَعَلَّکُمۡ تَتَّقُوۡنَ ۙ﴿۱۸۴﴾

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டதைப் போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்.

(2: 184)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ هُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡهُدٰی

وَالۡفُرۡقَانِ ۚ فَمَنۡ شَهِدَ مِنۡکُمُ الشَّهۡرَ فَلۡیَصُمۡهُ ؕ وَمَنۡ کَانَ مَرِیۡضًا اَوۡ عَلٰی سَفَرٍ

فَعِدَّۃٌ مِّنۡ اَیَّامٍ اُخَرَ ؕ یُرِیۡدُ اللّٰهُ بِکُمُ الۡیُسۡرَ وَلَا یُرِیۡدُ بِکُمُ الۡعُسۡرَ ۫

وَلِتُکۡمِلُوا الۡعِدَّۃَ وَلِتُکَبِّرُوا اللّٰهَ عَلٰی مَا هَدٰىکُمۡ وَلَعَلَّکُمۡ تَشۡکُرُوۡنَ ﴿۱۸۶﴾

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். திருக்குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக் கூடியதும் (நன்மை, தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால், நோயாளியாகவோ பயணியாகவோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்கவும்) .அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகின்றான். உங்களுக்குக் கடினத்தைத்(த் தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்.) (2: 186)

**அல்லாஹ் நாடியிருந்தால் மற்ற சமுதாயங்களைப் போன்று இந்த சமுதாயத்திலும் எந்தக் கட்டுப்பாட்டையும் வைத்திருக்க மாட்டான். ஆனால் அவன் கட்டுப்பாடுகளை நன்மைக்காக விதித்துள்ளான். மனிதன் தன்னைத் தானே இறைவனுக்காக கடினத்தில் ஆழ்த்திக் கொள்ளும்போது பின்னர் தாய், தந்தையைப் போன்று கருணை காட்டி நீ ஏன் கடினத்தில் வீழ்ந்து கிடக்கின்றாய்? என்று அவன் கூறுகின்றான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

ஃபித்யா ஏன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது? என்ற எண்ணம் ஒருமுறை எனது உள்ளத்தில் தோன்றியபோது நற்பேறு பெறுவதற்காக வேண்டி என்று தெரிய வந்தது. ஏனெனில் அதன் மூலம் நோன்பு நோற்பதற்கான நற்பேறு கிடைக்கின்றது. இறைவனே மனிதனுக்கு நற்பேறை வழங்குகின்றான். மேலும் எல்லா விஷயங்களையும் இறைவனிடமே வேண்ட வேண்டும். இறைவனோ வல்லமை மிக்கவன் ஆவான். அவன் நாடினால் பின்னர் வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்குக் கூட நோன்பு நோற்பதற்கான ஆற்றலை வழங்கக் கூடும். ஆக, ஆற்றல் கிடைத்து விட வேண்டும் என்பதே ஃபித்யா கொடுப்பதன் நோக்கம் ஆகும். மேலும் இது இறைவனின் அருளினால் நிகழ்கின்றது. எனவே என்னைப் பொருத்தவரை இது சிறந்ததாகும். அதாவது, மனிதன் இவ்வாறு துஆ செய்ய வேண்டும். இறைவா! இது உன்னுடைய ஒரு அருளுக்குரிய மாதமாகும். நான் இதிலிருந்து இழப்பிற்குரியவனாக இருந்து விடுகின்றேன். அடுத்த வருடம் நான் உயிருடன் இருப்பேனா; மாட்டேனா? அல்லது விடுபட்ட இந்த நோன்புகளை நோற்க முடியுமா; முடியாதா? என்று தெரியாது. எனவே இவ்வாறு அவனிடம் நற்பேறு வேண்டினால் பின்னர் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது; அப்படிப்பட்ட உள்ளத்திற்கு எல்லாம் வல்ல இறைவன் ஆற்றலை வழங்கி விடுவான்.

அல்லாஹ் நாடியிருந்தால் மற்ற சமுதாயங்களைப் போன்று இந்த சமுதாயத்திலும் எந்தக் கட்டுப்பாட்டையும் வைத்திருக்க மாட்டான். ஆயினும் அவன் கட்டுப்பாடுகளை நன்மைக்காக விதித்துள்ளான். என்னைப் பொருத்த வரை அசல் விஷயம் இதுவே ஆகும். அதாவது இந்த மாதத்தில் என்னை இழப்பிற்குரியவனாக ஆக்காதிருப்பாயாக! என்று மனிதன் வல்ல இறைவனின் சன்னிதானத்தில் உண்மையுடனும், சிறப்புடனும், தூய்மையுடனும் வேண்டினால் பின்னர் வல்ல இறைவன் அவரை இழப்பிற்குரியவராக ஆக்க மாட்டான். அதுபோன்ற நிலையில் மனிதன் ரமலான் மாதத்தில் நோய்வாய்பட்டு விட்டாலும் கூட அந்த நோயானது அவருடைய பங்கில் அருளுக்குரியதாக இருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு செயலும் எண்ணத்தைச் சார்ந்திருக்கின்றது. நம்பிக்கையாளர் என்பவர் தமது இருப்பால் தம்மைத் தாமே இறைவனின் வழியில் துணிவு மிக்கவராக நிரூபணம் செய்ய வேண்டும். எந்த நபர் நோன்பிலிருந்து இழப்பிற்குரியவராக இருக்கின்றாரோ ஆயினும், எனக்கு உடல் ஆரோக்கியம் இருந்திருந்தால் பின்னர் நானும் நோன்பு நோற்றிருப்பேனே என்ற எண்ணமும் வேதனையும் அவருக்கு உள்ளத்தால் இருக்கும் என்றால், மேலும் அந்த விஷயத்திற்காக அவர் மன்றாடுகின்றார் என்றால் பின்னர் வானவர்கள் அவருக்காக நோன்பு நோற்பார்கள். நிபந்தனை என்னவென்றால் மனிதன் சாக்குப்போக்குகளை தேடாதவனாக இருக்க வேண்டும். அவ்வாறெனில் பின்னர் வல்ல இறைவன் அவனை ஒருபோதும் நற்கூலியிலிருந்து இழப்பிற்குரியவராக வைக்க மாட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம்- 563)

## நபிமொழி

**ஸஹ்ரீ உண்டு விட்டு நோன்பு நோற்பதில் பரக்கத் உள்ளது**

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பிற்குரிய நாட்களில் ஸஹ்ரீ உண்ணுங்கள்; ஏனெனில், ஸஹ்ரீ உண்டு விட்டு நோன்பு நோற்பதில் அருள் உள்ளது. (புகாரீ, கிதாபுஸ் ஸவ்ம், பாப் பரக்கத்துஸ்ஸுஹூர்)

**சூரியன் மறைந்து விட்டால் பின்னர் நோன்பை திறந்து வி வேண்டும்**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரவு வந்து, பகல் சென்று விடும்போது அதாவது சூரியன் மறைந்து விட்டால் பின்னர் நோன்பாளி நோன்பை திறந்து விடவேண்டும்.

(புகாரீ, கிதாபுஸ் ஸவ்ம், பாப் பரக்கத்துஸ்ஸுஹூர்)

**நோன்பு திறக்கும் நேரத்தில் செய்ய வேண்டிய துஆ**

ஹஸ்ரத் மஆஸ் பின் ஸுஹ்ரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஃப்தார் நேரத்தில் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள்:

اَللّٰهُمَّ لَكَ صُمْتُ

وَعَلٰى

رِزْقِكَ اَفْطَرْتُ

பொருள்: அல்லாஹ்வே! நான் உனது திருப்தியை நாடி நோன்பு நோற்றுள்ளேன். மேலும் நீ வழங்கிய உணவைக் கொண்டு நான் (தற்போது) நோன்பு திறக்கின்றேன்.

(அபூதாவூத், கிதாபுஸ் ஸவ்ம்)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போரில் ஸஹாபா பெருமக்களுடைய ஷஹாதத் சம்பவங்கள் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது அவர்கள் கொண்டிருந்த நேசம் மற்றும் நன்றியுணர்வு குறித்த ஈமானை வலுவூட்டும் நற்குறிப்புகள்**

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளுக்கு கஃபனிடுவதற்காக வெளியில் வந்தபோது கூறினார்கள்: அவர்களை அவர்களுடைய காயங்களுடனேயே நல்லடக்கம் செய்து விடுங்கள். ஏனெனில், நான் அவர்களுக்கு சாட்சியாக இருக்கின்றேன். அல்லாஹ்வின் வழியில் காயப்படுத்தப்பட்ட எந்தவொரு முஸ்லிமும் கியாமத் நாளன்று எவ்வாறு வருவார் என்றால், அவருடைய இரத்தம் வழிந்து கொண்டிருக்கும். அதன் நிறம் குங்குமப் பூவின் நிறமாக இருக்கும். அதன் மணம் கஸ்தூரியின் மணமாக இருக்கும்

அன்ஸார் கூட்டத்தினரே! என்னிடம் வாருங்கள். நான் ஸாபித் பின் தஹ்தா ஆவேன். ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே கொல்லப்பட்டு இருந்தார்கள் என்றால், அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான்: அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான். எனவே நீங்கள் உங்களுடைய மார்க்கத்தின் சார்பாக போரிடுங்கள். அல்லாஹ் உங்களை வெற்றி பெறச் செய்வான். மேலும் உங்களுக்கு உதவி புரிவான்

**மனித குலம் அழிவிலிருந்து தப்பிப்பதற்கு துஆ செய்யும்படி அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 16 பிப்ரவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **16ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

உஹது போர் நிகழ்வுகள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அம்சங்கள் மற்றும் ஸஹாபா பெருமக்கள் அன்னார் (ஸல்) மீது கொண்டிருந்த அன்பு, நேசம் குறித்து கூறப்பட்டுக் கொண்டிருந்தது.

இது தொடர்பாக ஹஸ்ரத் காரிஜா பின் ஸைத் (ரலி) அவர்களுடைய உயிர் தியாகத்தைப் பற்றிய குறிப்பும் கிடைக்கின்றது. ஹஸ்ரத் காரிஜா (ரலி) அவர்கள் உஹது போரில் மிகவும் வீரத்தோடும், துணிச்சலோடும் போரிட்டவாறு ஷஹீது என்ற அந்தஸ்தை அடைந்தார்கள். ஈட்டி வீச்சில் சிக்கிவிட்டிருந்தார்கள். அன்னாருக்கு 13-க்கும் மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டன. அன்னார் காயங்களால் பலவீனமடைந்து கிடந்தபோது ஸஃப்வான் பின் உமைய்யா அன்னாரைக் கடந்து சென்றான். அப்போது அவன் அன்னாரை அடையாளம் கண்டு தாக்குதல் தொடுத்து ஷஹீது ஆக்கிவிட்டான். பின்னர், அன்னாருடைய உடல் உறுப்புகளையும் வெட்டினான்.

இவர் பத்ர் யுத்தத்தில் அபூ அலீயைக் கொன்றவர்களில் அதாவது, என் தந்தை உமையா பின் கல்ஃபைக் கொன்றவர்களில் ஒருவர் ஆவார்; இப்பொழுது ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் இந்தத் தோழர்களில் சிறந்தவர்களைக் கொன்று என் மனதைக் குளிர வைத்துக் கொள்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது என்று அவன் கூறினான். அவன் ஹஸ்ரத் இப்னு கவ்கல், ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது மற்றும் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹகம் (ரலி) ஆகியோரை ஷஹீது ஆக்கினான். ஹஸ்ரத் காரிஜா மற்றும் அன்னாரின் தந்தை வழி சகோதரர் ஸஃது பின் ரபீஃ ஆகிய இவர்கள் இருவரையும் ஒரே கப்ரில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அறிவிப்பில் வருகின்றது: உஹது நாளன்று ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா (ரலி) அவர்கள் மிகவும் உரத்தக் குரலில் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்: முஸ்லிம்களின் கூட்டத்தினரே! அல்லாஹ் மற்றும் உங்களுடைய நபியுடன் இணைந்திருங்கள். உங்களுக்கு வந்துள்ள இன்னல், உங்களுடைய நபிக்கு கட்டுப்படாமையின் காரணமாக ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் உங்களுக்கு உதவிக்கான வாக்குறுதிகள் வழங்கி இருந்தார்கள். ஆனால் நீங்கள் பொறுமை காக்கவில்லை ; பிறகு ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா (ரலி) அவர்கள் தமது தலைக்கவசத்தையும் உடற்கவசத்தையும் அவிழ்த்தார்கள்.

ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது (ரலி) அவர்களிடம் உங்களுக்கு இவை தேவையா? என்று கேட்டார்கள். காரிஜா கூறினார்கள்: இல்லை, உங்களுக்கு என்ன ஆசையோ அதேதான் எனக்கும் ஆசை ; அதாவது ஷஹீது ஆகுவது. பிறகு அவர்கள் அனைவரும் எதிரிகளோடு மோதினார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: நாம் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டது என்றால், நாம் நம் இறைவனுக்கு முன் என்ன காரணத்தை கூறமுடியும்?

ஹஸ்ரத் காரிஜா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: நம் இறைவனுக்கு முன்னால் நம்மிடம் எந்தக் காரணமும் கூறுவதற்கு இருக்காது. எந்தவொரு சான்றும் இருக்காது. ஹஸ்ரத் அப்பாஸ் பின் உபாதா (ரலி) அவர்களை சுஃப்யான் பின் அப்தி ஷம்ஸ் ஸலமீ ஷஹீது ஆக்கிவிட்டான். ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது (ரலி) அவர்களுக்கு ஈட்டியால் உடலில் 10-க்கும் மேற்பட்ட காயங்கள் ஏற்பட்டன. பிறகு மற்றொரு சான்றில் இவ்வாறு உள்ளது: உஹது நாளன்று ஹஸ்ரத் மாலிக் பின் துஃஹ்ஷும் ஹஸ்ரத் காரிஜா பின் ஸைது (ரலி) அவர்களைக் கடந்து சென்றார்கள். ஹஸ்ரத் காரிஜா (ரலி) அவர்கள் காயங்களால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய 13 கொன்று விடக் கூடிய காயங்கள் ஏற்பட்டிருந்தன.

ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் அன்னாரிடம், உங்களுக்கு தெரியாதா?; ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆக்கப்பட்டு விட்டார்கள் என்று கூறினார்கள். இது நிராகரிப்பாளர்கள் மீண்டும் தாக்குதல் தொடுத்த பிறகுள்ள குறிப்பாகும். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டார்கள். நீங்களும் உங்களுடைய மார்க்கத்திற்காகப் போர் புரியுங்கள். இப்பொழுது எதிரி உங்களுடன் சண்டையிடுகின்றான். எனவே நீங்களும் சண்டையிடுங்கள். நம்முடைய பணியும் அல்லாஹ்வுக்காக உயிரை அர்ப்பணிப்பதாகும். பிறகு ஹஸ்ரத் ஷமாஸ் பின் உஸ்மான் (ரலி) அவர்களுடைய உயிர் தியாகம் பற்றி வருகின்றது. ஹஸ்ரத் ஷமாஸ் பின் உஸ்மான் (ரலி) அவர்கள் பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். இவர்கள் உஹது போரில் பேரார்வத்துடன் போர் புரிந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் ஷமாஸ் பின் உஸ்மானைக் கேடயத்தை போன்று கண்டேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வலப்புறம் மற்றும் இடப்புறம் என எங்கு பார்வையை உயர்த்திப் பார்த்தாலும் அங்கு ஷமாஸைக் காண்பார்கள். இவர்கள் உஹது போரில் தமது வாளால் தற்காத்துக் கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு, கல் வந்து பட்டபோது இந்த நிலை ஏற்பட்டது. ஹஸ்ரத் ஷமாஸ் (ரலி) தம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கேடயமாக ஆக்கிக் கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால் அவர்கள் கடுமையாக காயமடைந்து விட்டார்கள். அவர்களை அதே நிலையில் மதீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இவர்களுக்கு சற்று உயிர் பாக்கியிருந்தது. இவர்களை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டது. என் தந்தையின் சகோதரர் வழி சகோதரரை என் வீட்டை விட்டு விட்டு வேறு யார் வீட்டுக்காவது அழைத்துச் செல்வீர்களா? என்று உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவர்களை உம்மு ஸலமாவிடம் தூக்கிச் செல்லுங்கள்.

எனவே இவர்கள் அவர்கள் வீட்டுக்கே கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களுடைய இல்லத்திலேயே இவர்கள் மரணமடைந்தார்கள். இவர்கள் உஹது களத்திலிருந்து காயமடைந்து வந்திருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளையின் பெயரில் ஹஸ்ரத் ஷமாஸ் (ரலி) அவர்களை உஹது களத்துக்குக் கொண்டு சென்று அதே ஆடையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இரண்டு தினங்களுக்கு பிறகு இவர்கள் மதீனாவில் மரணமடைந்து விட்டார்கள். ஆனால், இவர்கள் உஹது களத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். போருக்கு பிறகு இவர்களைக் காயமடைந்த நிலையில் மதீனாவுக்குத் தூக்கிக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கு ஒரு பகலும், ஓர் இரவும் இவர்கள் உயிருடன் இருந்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் இவர்கள் எதுவும் உண்ணவில்லை ; பருகவில்லை என்று கூறப்படுகின்றது. மிகவும் பலவீனமான நிலை இருந்தது. இன்னும் கூறுவதாயின் மயக்க நிலை இருந்தது. ஹஸ்ரத் ஷமாஸ் (ரலி) அவர்கள் 34 வயதில் மரணமடைந்தார்கள். அன்னார் (ரலி) இளைஞராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஷமாஸ் பின் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி வரலாறு எப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை பதிவு செய்துள்ளது என்றால், அது இவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதிருந்த நேசத்திற்கான ஓர் உதாரணம் ஆகிவிட்டது. மேலும் இஸ்லாத்திற்காகத் தியாகம் செய்வதற்கான உயர்தரமான முன்மாதிரியை நிலைநாட்டுவதற்கும் ஓர் உதாரணம் ஆகும்.

உஹது போரில் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களுடைய அன்பு நேசம் பற்றியக் குறிப்பு கிடைக்கின்ற அதேவேளையில் அதாவது எவ்வாறு அன்னார் தமது கையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்தவொரு அம்பும் பட்டு விடக் கூடாது என்பதற்காக அன்னாரின் அருளுக்குரிய முகத்திற்கு எதிரில் வைத்தார்கள் என்ற குறிப்பு கிடைக்கின்றது. அதேவேளையில் ஹஸ்ரத் ஷமாஸ் (ரலி) அவர்களும் மிகப் பெரும் பங்களிப்பை நிறைவேற்றினார்கள்.

ஹஸ்ரத் ஷமாஸ் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) ஹஸ்ரத் ஷமாஸைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்: ஷமாஸை ஏதாவது ஒரு விஷயத்தோடு ஒப்பிட வேண்டும் என்றால், நான் கேடயத்துடன் ஒப்பிடுவேன். அவர் உஹது போர்க் களத்தில் எனக்காக ஒரு கேடயமாக தானே மாறிவிட்டிருந்தார். அவர் எனக்கு முன்னும், பின்னும், வலமும், இடமும் பாதுகாத்தவாறு இறுதி மூச்சு வரை சண்டையிட்டுக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்தப் பக்கம் பார்வையை உயர்த்திப் பார்த்தாலும் அன்னார் கூறுகின்றார்கள்: ஷமாஸ் மிகவும் வீரத்துடன் அங்கு சண்டையிட்டவாறு எனக்கு காணக் கிடைத்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுப்பதில் எதிரி வெற்றி பெற்று, அன்னாருக்கு மயக்க நிலை ஏற்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். அப்பொழுதும் ஷமாஸ் (ரலி) அவர்களே கேடயமாக மாறி அன்னாருக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். எதுவரை என்றால், அன்னார் மிக கடுமையாக காயமடைந்து விட்டார்கள். இதேநிலையில் அன்னார் மதீனாவுக்குக் கொண்டு வரப்பட்டார். ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இவர் என் தந்தையின் சகோதரரின் மகன் ஆவார். நான் இவருக்கு மிகவும் நெருங்கிய உறவு ஆவன். எனவே என்னுடைய வீட்டில் இவருக்குப் பணிவிடையும், சிகிச்சையும் நடைபெற வேண்டும்.

ஆனால், கடுமையான காயம் ஏற்பட்டிருந்ததன் காரணமாக ஒன்று அல்லது ஒன்றரை நாளுக்குப் பிறகு அன்னார் (ரலி) மரணமடைந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மற்ற உயிர்த் தியாகிகளை நல்லடக்கம் செய்யப்பட்டது போன்று ஷமாஸையும் அவருடைய ஆடையிலேயே நல்லடக்கம் செய்யுங்கள்.

அடுத்து, ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் (ரலி) அவர்களின் உயிர்த் தியாகத்தைப் பற்றிய குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் (ரலி) பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹீதானார்கள். இவர்களை ஸஃப்வான் பின் உமையா என்பவன் ஷஹீது ஆக்கினான்.

மற்றோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் (ரலி) அவர்களை அபான் ஸயீது என்பவன் ஷஹீது ஆக்கினான். ஹஸ்ரத் நுஃமான் பின் மாலிக் (ரலி) அவர்கள் பணிவுடன் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறைவன் மீது ஆணையாக! நான் கண்டிப்பாக சொர்க்கத்தில் நுழைவேன்.

நான் கண்டிப்பாக சொர்க்கத்தில் நுழைவேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவர்கள் மிகவும் அறுதியிட்டுக் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அது எப்படி? என்று கேட்டார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் பணிவுடன் இவ்வாறு கூறினார்கள்: எவ்வாறு என்றால், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை என்றும் தாங்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவீர்கள் என்றும் நான் சாட்சி பகர்கின்றேன். மேலும் நான் போரிலிருந்து ஒருபோதும் ஓட மாட்டேன்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீர் உண்மையைக் கூறினீர் என்று கூறினார்கள். எனவே அவர் அன்றைய தினமே ஷஹீதாகிவிட்டார்.

காலித் பின் அபூ மாலிக் ஜஃதி அறிவிக்கின்றார்கள்: நான் என் தந்தையின் நூலில் இவ்வாறு அறிவிப்பு காணப் பெற்றேன். ஹஸ்ரத் நுஃமான் பின் கவ்கல் அன்ஸாரி இவ்வாறு துஆ செய்தார்கள்; என் இறைவா! நான் உன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். சூரியன் மறைந்து கூட இருக்காது; அதற்குள் நான் என்னுடைய முடமான காலோடு சொர்க்கத்தின் பசுமையான இடத்தில் நடந்து சென்று கொண்டிருப்பேன்.

ஆக, அன்னார் அன்றைய தினமே ஷஹீது ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் அவருடைய துஆவை ஏற்றுக் கொண்டான். ஏனெனில், நான் அவரைப் பார்த்தேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆன்மிகக் காட்சியில் கண்டார்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இதைக் கூறினான். அன்னார் கூறினார்கள்: நான் அவரைப் பார்த்தேன். அவர் சொர்க்கத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார். அவரிடம் எவ்வித முடமோ அல்லது தடுமாற்றமோ இருக்கவில்லை.

பின்னர், ஹஸ்ரத் ஸாபித் பின் தஹ்தா (ரலி) அவர்கள் பற்றி கூறப்படுகின்றது: ஸாபித் பின் தஹ்தா (ரலி) அவர்களும் உஹது போரில் மிகப் பெரும் பங்களிப்பை ஆற்றினார்கள். அவர்களின் பங்களிப்பு மிகவும் தெளிவானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆனதாகக் கூறப்பட்ட செய்திக்குப் பிறகு முஸ்லிம்களில் சிலர் கூறினார்கள்: இப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள். நீங்கள் உங்களுடைய சமுதாயத்திடம் திரும்பிச் செல்லுங்கள்; அவர்கள் உங்களின் உயிருக்கு உத்திரவாதம் அளிப்பார்கள்.

இதைக் கேட்ட மற்ற மக்கள் சிலர், ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்றால், நீங்கள் ஷஹீது ஆகி உங்கள் இறைவனுக்கு முன்பு ஆஜராகி விடும் வரை நீங்கள் உங்களுடைய நபி (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்காகவும், அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்திக்காகவும் போரிட மாட்டீர்களா? என்று கேட்டார்கள்.ஹஸ்ரத் ஸாபித் பின் தஹ்தா (ரலி) அவர்கள் அன்ஸாரி ஸஹாபிகளிடம் கூறினார்கள்: அன்ஸார் கூட்டத்தினரே! ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள் என்றால், அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான். அவனுக்கு மரணம் ஏற்பட முடியாது. உங்களுடைய மார்க்கத்திற்காக போரிடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு வெற்றி வாகையை வழங்க உள்ளான். இதைக் கேட்ட அன்ஸாரி முஸ்லிம்களின் ஒரு கூட்டம் எழுந்தது. அவர்கள் ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்களுடன் இணைந்து இணை வைப்பாளர்களின் ஒரு கூட்டத்தின் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். அதில் காலித் பின் வலீத், இக்ரிமா பின் அபீ ஜஹ்ல், அம்ர் பின் ஆஸ், ஸிரார் பின் கத்தாப் போன்றோர் இருந்தார்கள். முஸ்லிம்களின் இந்த சிறு குழு தாக்குதல் தொடுப்பதைப் பார்த்த காலித் பின் வலீத் மிகவும் கடுமையான எதிர்த் தாக்குதல் தொடுத்தார். ஸாபித் பின் தஹ்தா மற்றும் அன்னாரின் அன்ஸாரி தோழர்களை ஷஹீது ஆக்கி விட்டார்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: அப்துல்லாஹ் பின் உமர்

ஃஹுத்மீ அறிவிக்கின்றார்கள்: ஸாபித் பின் தஹ்தா உஹுது நாளில் முன்னால் சென்றார்கள். மேலும் முஸ்லிம்கள் அப்பொழுது சிதறுண்டும், மிகவும் கவலையுடனும் இருந்தனர். இவர்கள் உரத்த குரலில் இவ்வாறு அழைக்க ஆரம்பித்தார்கள்:

அன்ஸார் கூட்டத்தினரே! என்னிடம் வாருங்கள். நான் ஸாபித் பின் தஹ்தா ஆவேன். ஒருவேளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே கொல்லப்பட்டு இருந்தார்கள் என்றால், அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான்: அவன் ஒருபோதும் மரணிக்க மாட்டான். எனவே நீங்கள் உங்களுடைய மார்க்கத்தின் சார்பாக போரிடுங்கள். அல்லாஹ் உங்களை வெற்றி பெறச் செய்வான். மேலும் உங்களுக்கு உதவி புரிவான்.

எனவே அன்ஸாரி முஸ்லிம்களின் ஒரு கூட்டத்தினர் ஒன்று கூடிவிட்டனர். இவர்கள் அன்ஸாரி ஸஹாபிகளாக இருந்தார்கள். இவர்கள் முஸ்லிம்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு நிராகரிப்பாளர்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தார்கள். இவர்களுக்கு எதிராக நிராகரிப்பாளர்களின் ஒரு பயங்கரமான படை வந்தது. அதில் அவர்களின் தலைவர்களான காலித் பின் வலீத், அம்ர் பின் ஆஸ், இக்ரிமா பின் அபீ ஜஹ்ல் மற்றும் ஸிரார் பின் கத்தாப் ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்று கூடி இவர்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் மீது காலித் பின் வலீத் ஈட்டியால் தாக்கினார். ஈட்டியை அவர்களின் உடலைக் கடக்கச் செய்து விட்டார். ஸாபித் (ரலி) ஷஹீது ஆகிவிட்டார்கள். அவர்களுடன் இருந்த இன்னும் சில அன்ஸாரி ஸஹாபிகளும் ஷஹீது ஆகிவிட்டார்கள். இதன் காரணமாகவே அந்த நாளில் எல்லா முஸ்லிம்களுக்கும் இறுதியாக இந்த மக்களே ஷஹீது ஆனார்கள் என்று கூறப்படுகின்றது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. காலித் முன்னால் வந்து ஈட்டி எறிந்தார். அதனால் ஹஸ்ரத் ஸாபித் (ரலி) அவர்கள் காயமடைந்து நிலத்தில் விழுந்தார்கள். மக்கள் தூக்கி வந்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுதோ இரத்தம் நின்று விட்டது. அவர்கள் நலமாகி விட்டார்கள். ஆனால், ஹுதைபிய்யா போருக்குப் பிறகு திடீரென்று மீண்டும் காயம் வெடித்து விட்டது. அதன் பெருந்துயரத்தால் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். எவ்வாறு இருப்பினும், இது ஓர் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் ஸூம்ரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸாபித் பின் தஹ்தா (ரலி) அவர்களுடைய ஜனாஸாவோடு நடந்தே சென்றார்கள். மேலும், குதிரையில் அமர்ந்து திரும்பி வந்தார்கள். இந்த அறிவிப்பிலும் கூட அதாவது ஹுதைபிய்யா போருக்குப் பிறகு (காயம்) வெடித்ததனால் மரணமடைந்தார்கள் என்ற இந்த அறிவிப்பு பலவீனமானதாகத் தெரிகின்றது. இவர்கள் இதே சந்தர்ப்பத்திலேயே ஷஹீது ஆனார்கள்.

ஒரு வம்சத்தின் நான்கு பேர் ஷஹீது ஆனது பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. ஸாபித் பின் வஷ், ரிஃபா பின் வஷ் ஆகிய இரண்டு சகோதரர்களும் உஹுது அன்று ஷஹீது ஆனார்கள். அன்னாருடன் சேர்ந்து ஸாபித் பின் வஷ் அவர்களின் இரண்டு மகன்கள் ஸலமா பின் ஸாபித் மற்றும் அம்ர் பின் ஸாபித் ஆகியோரும் ஷஹீது ஆனார்கள். அம்ர் பின் ஸாபித் (ரலி) அவர்களின் பெயர் உஸைரம் என்றும் கூறப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் அன்ஸாரிகளின் கோத்திரமான பனூ அஷ்அல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். ரிஃபா பின் வஷ் வயதான மனிதராக இருந்தார். ரிஃபா மற்றும் ஸாபித் என்ற இரு சகோதரர்களும் உஹுது போரில் ஒன்றாகப் போர் புரிந்தார்கள். ரிஃபா அவர்களை காலித் பின் வலீத் ஷஹீது ஆக்கினார்.

ஹஸ்ரத் ஸாபித் பின் வஷ் (ரலி) அவர்களின் உயிர்த் தியாக சம்பவம் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது: இப்னு இஸ்ஹாக் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது போருக்காக புறப்பட்டபோது, ஸாபித் பின் வஷ் மற்றும் ஹுஸைல் பின் ஜாபிர், இவர்களுக்கு யமான் என்ற பெயரும் இருந்தது. இவர்கள் ஹுஸைஃபா பின் யமானின் தந்தை ஆவார்கள். இவர்கள் இருவரும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். முஸ்லிம்களின் பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்பிற்காக தஞ்சம் அடைந்திருந்த அந்தக் கோட்டையில் இருந்தார்கள்.

இவர்களில் ஒருவர் மற்றவரிடம் இவ்வாறு கூறினார்: நீ எதற்காக காத்துக் கொண்டிருக்கின்றாய்? நமக்கு அதிக வயது ஒன்றும் மீதமில்லை. இன்று நாம் மரணிக்கவில்லை என்றால், நாளை கண்டிப்பாக மரணிக்கப் போகின்றோம். நாமும் நம்முடைய வாள்களை ஏந்த வேண்டாமா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு சென்று இணைந்து கொள்ள வேண்டாமா? ஒருவேளை எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு உயிர்த் தியாகத்தை வழங்கிவிடலாம்.

பிறகு, இவர்கள் இருவரும் வாளை ஏந்திக் கொண்டு நிராகரிப்பாளர்கள் மீது பாய்ந்தார்கள். மக்களோடு மக்களாக கலந்து விட்டார்கள். அதாவது போரில் கலந்து கொண்டார்கள்.

அமர் பின் ஸாபித் அல்லது உஸைரம் இது இவர்களின் பெயரும் ஆகும். நான் கூறியதுபோன்று, அம்ர் பின் ஸாபித் பின் வஷ் அன்ஸாரி உஸைரம் என்ற பெயரால் பிரசித்தி பெற்றிருந்தார்கள். இவர்களின் தாயார் ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் யமானின் சகோதரியாக இருந்தார்கள். இவர்கள் உஹுது போர் அன்று ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு முஸ்லிம் ஆனார்கள். ஃபஜ்ர் தொழவில்லை. இதற்குப் பிறகு இவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள். இவர்கள் தமது குதிரை மீது பயணித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சென்றடைந்தார்கள். ஷஹீதாகும் வரை முஸ்லிம்களுடன் இணைந்து ஜிஹாது செய்து கொண்டே இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் - அதாவது இவர்கள் ஸஹாபி ஆவார்கள்.ஒருபோதும் தொழுதிராமல் சொர்க்கவாசியான ஒரு நபரைப் பற்றி எனக்குக் கூறுங்கள் என்று அவர்கள் ஸஹாபாவிடம் கூறினார்கள்:.

ஆக, மக்களுக்கு அதைப் பற்றி தெரிந்திருக்கவில்லை. அது யார் ? என்று அவர்களிடம் கேட்டார்கள். அப்பொழுது அவர்கள் அது உஸைரம் பின் உஸைரம் என்று கூறினார்கள். அதாவது, அம்ர் பின் ஸாபித்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. உஸைரம் தமது சமுதாயத்துக்கு முன்னால் இஸ்லாத்தை மறுத்து வந்தார்கள். உஹுது போர் நடைபெற்றபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் சென்று விட்டிருந்தபோது, உஸைரமுக்கு முன்னால் இஸ்லாத்தின் உண்மைத்துவம் தெளிவாகி விட்டிருந்தது. எனவே அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். பிறகு, தமது வாளை எடுத்துக் கொண்டு தமது சமுதாயத்திடம் சென்றார்கள். மக்களுக்குள் நுழைந்து போரிட ஆரம்பித்தார்கள். எதுவரை என்றால் காயங்கள் அவர்களை பலவீனமாக்கி விட்டன.

இதற்கிடையில் பனூ அப்தில் அஷ்அல் கோத்திரத்து மக்கள் தங்களுடைய ஷஹீதுகளின் சடலங்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று இவர்கள் மீது பார்வை பட்டது. அவர்கள் வியந்துபோய், இவரோ உஸைரம் ஆவார். ஆனால் இவரை இங்கு யார் கொண்டு வந்தது? நாங்களோ இவர் இஸ்லாத்தை மறுக்கிறார் என்று இவரை விட்டு விட்டு வந்தோமே? என்று கூறினார்கள்.

பிறகு, அவர்கள் அவரிடம் உஸைரம் நீ இங்கு எப்படி வந்தாய்? உனது சமுதாயத்தின் மீதான தன்மானத்தின் காரணமாகவா? அல்லது இஸ்லாத்தின் மீதான ஆர்வத்தின் காரணமாகவா? என்று கேட்டனர். அதற்கு அவர்கள் இஸ்லாத்தின் மீதான ஆர்வத்தின் காரணமாக அதாவது, நான் இஸ்லாத்தை உண்மையானதாக ஏற்றுக் கொண்டேன். எனவேதான் வந்தேன் என்றார்.

நான் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டு முஸ்லிம் ஆனேன். எனது வாளை ஏந்திக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து போரிட்டுக் கொண்டிருந்தேன். எதுவரை என்றால் நீங்கள் எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த நிலை எனக்கு ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள்.பிறகு அவர்கள் மக்களின் கைகளில் உயிரை விட்டு விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இதைப் பற்றி கூறப்பட்டபோது ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர் சொர்க்கவாசி ஆவார் என்று கூறினார்கள்.

அவர் சொர்க்கவாசி என்று கூறினார்கள் என்ற அந்த இடத்தில் நான் எதனால் சற்று நின்று விட்டேன் என்றால், அங்கு ரலியல்லாஹு அன்ஹு என்று எழுதப்பட்டிருந்தது. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்று எழுதியிருக்க வேண்டும். யாராவது ஒரு ஸஹாபி கூறிருப்பாரோ என்ற தவறான புரிதல் ஏற்பட்டிருந்தது. ஆனால், எவ்வாறு இருப்பினும், அவர் சொர்க்கவாசி ஆவார் என்று ஹஸ்ரத் ரஸூல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்பது இதன் மூலமாக தெளிவாகி விடுகின்றது. முதல் அறிவிப்பும் இந்த வகையில் சரியானதாகத் தெரிகிறது. அதாவது தொழாமல் சொர்க்கத்திற்குச் சென்றவர் இவராவார். கடைசி தருணத்தில் வந்தார்கள். ஷஹீது எனும் தகுதியைப் பெற்றார்கள்.

இந்த வம்சத்தின் நான்காவது ஷஹீது

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஹஸ்ரத் ஸல்மா பின் ஸாபித் ஆவார்கள். ஸலமா பின் ஸாபித் அவர்களின் முழுப் பெயர் ஸல்மா பின் ஸாபித் பின் வஷ் ஆகும். ஹஸ்ரத் ஸலமா பத்ர் யுத்தத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். உஹது போரில் அபூஸுஃப்யான் ஹஸ்ரத் ஸலமா பின் ஸாபித் (ரலி) அவர்களை ஷஹீது ஆக்கிவிட்டார். ஹஸ்ரத் ஸலமா (ரலி) அவர்களின் தந்தை ஹஸ்ரத் ஸாபித் பின் வஷ் (ரலி) மற்றும் சிறிய தந்தை ஹஸ்ரத் ரிஃபா பின் வஷ் மற்றும் அன்னாரின் சகோதரர் அம்ர் பின் ஸாபித் (ரலி) அவர்களும் உஹது போரில் ஷஹீது ஆனார்கள். இந்த வம்சத்தின் பலர் உஹது போரில் ஷஹீது ஆனார்கள்.

முஃஹைரிக் ஓர் யூதர் ஆவார். பனூ நளீர் கோத்திரத்தைச் சேர்ந்தவராவார். முஹம்மது பின் உமர் அஸ்லமீ இவர் இஸ்லாத்தை ஏற்றதாக குறிப்பிட்டுள்ளார். சிலர் கூறினார்கள்: இவர் பனூ கேன்க்கா கோத்திரத்தைச் சேர்ந்தவராவார். சிலரது பார்வையில் இவர் பனூ ஸஃலபா பின் ஃபித்யூன் கோத்திரத்தைச் சேர்ந்தவராவார். இவர் யூதர்களின் பெரிய அறிஞர்களில் ஒருவர் ஆவார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஹுஸுர் (ஸல்) அவர்களின் நற்பண்புகள் மற்றும் தனது அறிவால் அடையாளம் கண்டு கொண்டிருந்தார். ஆனால், தன் மதத்தின் மீதான அன்பு அவரிடம் மேலோங்கியிருந்தது. ஈமான் கொள்ளவில்லை.

சனிக்கிழமை அன்று அவர் கூறினார்: யூதர்களின் கூட்டமே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்வது உங்கள் மீது கடமையான உரிமையாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதாவது உஹதுக்காக படை வெள்ளிக்கிழமை அன்று புறப்பட்டதல்லவவா! அவர் அடுத்த நாள் சனிக்கிழமை அன்று கூறினார். அவர்கள் கூறினார்கள்: இன்று சனிக்கிழமை ஆகும்.

அந்த மக்கள், இன்றோ சனிக்கிழமை ஆயிற்றே இன்றோ எந்தப் போர் பற்றிய விஷயமும் கிடையாதே என்று கூறினார்கள். அதற்கு அவர் கூறினார்: உங்களுக்கு சனிக்கிழமை என்று எதுவும் கிடையாது. பிறகு தமது சமுதாயத்து மக்களிடம் கூறினார்: ஒருவேளை நான் இன்று கொல்லப்பட்டு விட்டேன் என்றால், என்னுடைய செல்வம் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு சொந்தமாகும். அவர்கள் அதிலிருந்து என்ன செலவு வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். பிறகு தன்னுடைய ஆயுதங்களை ஏந்திக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். போர் நடைபெற்றபோது இவர் போரிட்டவாறு ஷஹீது ஆகிவிட்டார். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: முஃஹைரிக் யூதர்களில் முந்திச் சென்று விட்டார். ஸல்மான் பாரசீகர்களில் முந்திச் சென்று விட்டார். பிலால் அபீஸீனியர்களில் முந்திச் சென்று விட்டார்.

ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் முஃஹைரிக் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்: அவர் இஸ்லாத்திற்காக நிராகரிப்பாளர்களுடன் போரிட்டவாறே தன் உயிரைத் தியாகம் செய்து விட்டார் என்பது ஒரு கருத்தாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து இவருக்காக புகழாரச் சொற்கள் வெளிவந்தன. இதன் அடிப்படையில் பல்வேறு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களும், வரலாற்று அறிஞர்களும் முஃஹைரிக்கை முஸ்லிம் என்று மீண்டும் மீண்டும் கூறியுள்ளார்கள். அவர்களில் இப்னு ஹிஷ்ஷாம், ஸுஹைலீ இப்னு ஹஜர், இப்னு கஸீர் பலாதிரீ, காஸீ அய்யாஸ் மற்றும் நவ்வீ மற்றும் பிறர் அடங்குவார்கள்.

பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் பற்றிய குறிப்பு உள்ளது. வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: இறைவன் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசம் அவர்களை உலகம் முழுவதின் தேவையும் அற்றவராக ஆக்கிவிட்டிருந்தது. அவர்களுக்கு ஏதாவது ஆசை இருந்தது என்றால், இந்த அன்பிற்குரிய உயிர் எப்படியாவது இறைவழியில் அர்ப்பணமாகி விட வேண்டும் என்ற இந்த ஆசை மட்டுமே இருந்தது. எனவே, அவர்களின் இந்த ஆசை நிறைவேறியது. மேலும் முஜ்தஃ ஃபில்லாஹ் அதாவது, இறைவழியில் காது அறுபட்டவர் என்பது அவர்களின் பெயரின் தனிச்சிறப்பான அடையாளம் ஆகிவிட்டது.

ஷஹீது ஆகுவதற்கு முன்னர் இவர்களின் ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆவாக இதுவும் இருந்தது. அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களைப் பற்றி அவர்களின் துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டது? என்று வருகின்றது. அவர்களின் உயிர்த்தியாகத்துக்கு முன்பு அவர்களுடைய துஆ ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சம்பவம் பிரசித்தி பெற்றது. இஸ்ஹாக் பின் ஸஃது பின் அபீ வகாஸ் அவர்கள் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் என் தந்தையிடம் அதாவது ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்களிடம் உஹது நாளன்று வாருங்கள், எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் துஆ செய்வோம் என்று கூறினார்கள். எனவே இருவரும் ஒரு பக்கம் சென்று விட்டார்கள்.

முதலில் ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் இவ்வாறு துஆ கேட்டார்கள். என் இறைவா நாளை நான் எதிரிகளை சந்திக்கும்போது போர் புரிவதில் மிகக் கடுமையான, வீரமிக்க ஓர் எதிரியை நான் எதிர் கொள்ள வேண்டும். அவன் பெரும் திகிலை உண்டாக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். நான் அவனுடன் போரிட்டு அவனை உன் வழியில் கொன்று விட வேண்டும். மேலும் அவனுடைய ஆயுதங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் ஆமீன் என்று கூறினார்கள்.

இதற்கு பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் துஆ செய்தார்கள். முதலில் முதல் ஸஹாபியின் துஆ இருந்தது. இப்பொழுது அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் துஆ இவ்வாறு இருந்தது:

அல்லாஹ்வே! நாளை எனக்கு முன்னால் தாக்குதல் தொடுப்பதில் கடுமையான ஒருவன் வரவேண்டும். அவன் பெரும் திகிலை உண்டாக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். நான் உனக்காக அவனுடன் போரிட வேண்டும். அவன் என்னுடன் போரிட வேண்டும். அவன் மேலோங்கி என்னைக் கொன்று விட வேண்டும். மேலும், என்னைப் பிடித்து என்னுடைய மூக்கையும் காதுகளையும் அறுத்து விட வேண்டும்.

எனவே நான் உனக்கு முன் ஆஜராகும்போது, நீ என்னிடம் அப்துல்லாஹ்வே! யாருடைய வழியில் உன்னுடைய மூக்கும் இரு காதுகளும் வெட்டப்பட்டன என்று கேட்க வேண்டும். அல்லாஹ்வே! உன்னுடைய வழியில் மற்றும் உன் தூதர் (ஸல்) அவர்களுடைய வழியில் என்று நான் பணிவுடன் உன்னிடம் கூறவேண்டும். அதற்கு பதில் அளித்தவாறு நீ என்னிடம், நீ உண்மையைக் கூறினாய் என்று கூறவேண்டும்.

அதாவது நீ உண்மையைக் கூறினாய் என்று அல்லாஹ்வும் கூறவேண்டும் என்று அல்லாஹ்விடம் இந்த ஆசையை வைத்தார்கள். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் துஆ நான் செய்த துஆவை விடச் சிறந்ததாக இருந்தது. ஏனெனில், கடைசி நாளில் நான் அவர்களின் மூக்கு மற்றும் இரண்டு காதுகளையும் ஒரு நூலில் தொங்கக் கண்டேன். அதாவது, வெட்டப்பட்டிருந்தன. மேலும் அவை கோர்க்கப்பட்டிருந்தது.

ஸஹாபிகள் அல்லாஹ்விடம் கொண்டிருந்த நேசத்தின் தோரணை மிகவும் வினோதமாக இருந்து வந்தது. ஹஸ்ரத் முத்தலிப் பின் அப்தில்லாஹ் ஹன்தப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹதை நோக்கி புறப்பட்ட அன்று வழியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு அருகில் ஷைஃஹைன் எனும் ஓர் இடத்தில் இரவு தங்கினார்கள்.

அங்கு உம்மு ஸலமா (ரலி) அவர்கள் பொறித்த இறைச்சியைக் கொண்டு வந்தார்கள். அதிலிருந்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உண்டார்கள். அவ்வாறே பேரீத்தம் பழச் சாறைக் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பேரீத்தம் பழச்சாறையும் அருந்தினார்கள். இதுவும் ஒரு வகையான உணவாகும். அது மெல்லியதாக இருக்கும்.

பிறகு, ஒரு மனிதர் அந்தப் பேரீத்தம் பழச்சாறின் குவளையை எடுத்தார். மேலும் அதிலிருந்து சற்று அருந்தினார். பிறகு அந்தக் குவளையை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். மேலும் அதை குடித்து காலியாக்கி விட்டார்கள். ஒரு மனிதர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களிடம், எனக்கும் சற்று தாருங்கள். நாளை காலை நீங்கள் எங்கு செல்வீர்கள்? என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார். அதாவது போர் நடக்கவிருக்கிறது. யார் ஷஹீது ஆகப் போகிறார்; யார் உயிருடன் இருக்கப் போகிறார் என்று என்ன தெரியும்?

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆம்! எனக்குத் தெரியும். நான் ஷஹீது ஆகிவிடுவேன் என்று எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. நான் அல்லாஹ்வை இந்த நிலையில் சந்திக்க விரும்புகிறேன். பிறகு அவர்கள் கூறினார்கள்: நான் தாகித்தவனாக அல்லாஹ்வை சந்திப்பதை விட வயிறார உண்டும், பருகியுமிருக்கும் நிலையில் நான் அல்லாஹ்வை சந்திப்பது எனக்கு அதிகம் பிடித்தமானது. அல்லாஹ்வை சந்திக்கத்தான் போகின்றேன். நான் நன்றாக வயிறார உண்டு அல்லாஹ்வை சந்திப்பேன். இது எனக்கு ஆசையாகும். எனவேதான் நான் இதனைப் பருகுகிறேன்.

ஸஹாபா பெருமக்கள் அல்லாஹ்விடம் கொண்டிருந்த நேசத்தின் வினோதமான தோரணையாகும் இது. இதற்காக அவர்களின் ஆயத்தங்களும்

வினோதமான வகையில் இருக்கின்றன.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் (ரலி) அவர்கள் ஆகிய இருவரையும் ஒரே கப்ரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களின் மாமா ஆவார்கள். ஷஹீது ஆகும்போது இவர்களுக்கு 40 ஐ விடச் சற்று அதிக வயது இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களின் மகனுக்கு கைபரில் பொருள் வாங்கிக் கொடுத்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் அபூ ஸஃது ஃஹைஃஸமா பின் அபீ ஃஹைஃஸமாவின் உயிர்த் தியாகம் மற்றும் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பித்தது பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. இவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அதன் விவரம் கிடைக்கின்றது. முஹம்மத் பின் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஃஹைஃஸமா உஹது நாளன்று பணிவுடன் இவ்வாறு கேட்டுக் கொண்டார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னால் பத்ர் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதற்காக பெரும் ஆசை கொண்டிருந்தேன். எதுவரை என்றால் நான் பத்ரில் செல்வதற்காக சீட்டுக் குலுக்கிப் போட்டேன். அப்பொழுது என் மகன் ஸஃது பின் ஃஹைஃஸமாவின் பெயர் வந்தது. மேலும், அவர் பத்ர் யுத்தத்தில் ஷஹாதத்தைப் பெற்றார். கடந்த இரவு நான் கனவில் அவரை மிக நல்ல தோற்றத்தில் கண்டேன். அவர் சொர்க்கத்தின் தோட்டங்கள் மற்றும் நதிகளில் உலாவிக் கொண்டிருந்தார். மேலும் நீங்கள் எங்களிடம் வந்து விடுங்கள். நாம் சொர்க்கத்தில் ஒன்றாக போகலாம் என்று என்னிடம் கூறிக் கொண்டிருந்தார்.

நான் என் இறைவனின் வாக்குறுதியை உண்மை ஆகக் கண்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் சொர்க்கத்தில் இருக்க விரும்புகின்றேன். அதாவது நான் அங்கு சென்று அவரை சந்திக்க விரும்புகிறேன். அவர்கள் கூறினார்கள்: எனவே ஹுஸுர் (ஸல்) அவர்களே அவன் எனக்கு உயிர்த் தியாகத்தை வழங்கி சொர்க்கத்தில் அவருடன் இருக்கச் செய்ய துஆ செய்யுங்கள்.

எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அன்னாருக்காக துஆ செய்தார்கள். ஆக, அவர்கள் உஹதில் ஷஹீது ஆகி விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்களின் உயிர்த் தியாகம் பற்றிய குறிப்பு இருக்கின்றது. இது ஓர் அறிவிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் உஹது போருக்காகப் புறப்பட எண்ணியபோது, தம் மகன் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: என் மகனே! நான் முதல் வரிசை ஷஹீதுகளில் ஒருவனாக இருப்பேன் என்பதைக் காண்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு உன்னைத் தவிர எனக்கு மிகவும் அன்பிற்குரியவர்களான வேறு எவரையும் எனக்குப் பின்னால் விட்டுச் செல்லவில்லை. அதாவது, இவர்கள் இருவரும் எனக்கு உலகில் அன்பிற்குரியவர்களாவார்கள். எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அன்னாருக்குப் பிறகு என் மகன் நீ ஆவாய். என் பொறுப்பில் என்னுடைய சில கடன்கள் இருக்கின்றன. அந்தக் கடன்களை என் தரப்பிலிருந்து செலுத்தி விடு. மேலும் நான் உனக்கு உன்னுடைய சகோதரிகளோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறுகின்றேன். உன் சகோதரிகளோடு நல்ல முறையில் நடந்து கொள். அவர்களுடைய உரிமைகளைப் பறிக்காதே!.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அடுத்த நாள் காலையில் என் தந்தையார் எல்லாருக்கும் முதலாக ஷஹீதானார்கள். எதிரிகள் அன்னாருடைய மூக்கு மற்றும் காதுகளை வெட்டிப் போட்டார்கள். ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது போர் ஷஹீதுகளை நல்லடக்கம் செய்ய வருகை தந்தபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அவர்களை அவர்களுடைய காயங்களுடனேயே நல்லடக்கம் செய்து விடுங்கள். ஏனெனில், நான் அவர்கள் மீது சாட்சியாளனாக உள்ளேன். அல்லாஹ்வின் வழியில் காயப்படுத்தப்பட்ட எந்தவொரு முஸ்லிமும் கியாமத் நாளன்று எவ்வாறு வருவார் என்றால், அவருடைய இரத்தம் வழிந்து கொண்டிருக்கும். அதன் நிறம் குங்குமப் பூவின் நிறமாக இருக்கும். அதன் மணம் கஸ்தூரியின் மணமாக இருக்கும். அதாவது இவர்கள் பிடித்தமான மக்கள் ஆவார்கள். இவர்கள் அல்லாஹ்வின் முன் ஆஜராவார்கள். அவர்களை நீராட்டுவதற்கும், கஃபனிடுவதற்கும் எந்தத் தேவையுமில்லை. அவர்களுடைய ஆடையே அவர்களது கஃபனாகும்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: என் தந்தைக்கு ஒரு போர்வை கஃபனாகத் தரப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இவர்களில் யாருக்கு திருக்குர்ஆன் அதிகமாகத் தெரியும்? என்று வினவிக் கொண்டிருந்தார்கள்.

இந்த ஷஹீதுமார்கள் நல்லடக்கம் செய்யப்படும்போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யார் அதிகம் திருக்குர்ஆன் அறிந்தவர்? என்று வினவி வந்தார்கள். இவர் அதிகம் திருக்குர்ஆன் (மனனமாகத்) தெரிந்தவர் என்று ஒருவர் பக்கம் சுட்டிக் காட்டப்படும்பொழுது அன்னார்(ஸல்) கூறுவார்கள்: இவருடைய தோழர்களுக்கு முன்பு இவரை முதலில் கபரில் இறக்குங்கள். ஏனெனில், அவர் திருக்குர்ஆன் அறிந்தவர்.எனவே அன்னார் அவரை முதலில் நல்லடக்கம் செய்தார்கள்.

சரி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் உஹது நாளன்று எல்லாருக்கும் முதலாக ஷஹீது ஆனார்கள். அன்னாருடைய நல்லடக்க சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்துல்லாஹ் பின் அம்ர் மற்றும் அம்ர் பின் ஜமூஹ் ஆகிய இருவரையும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யுங்கள். ஏனெனில், அவர்களுக்கிடையில் தூய்மையும்,அன்பும் இருந்தது.

மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உலகில் ஒருவர் மற்றவருடன் அன்பு கொள்ளக் கூடியவர்களாக இருந்த அவர்கள் இருவரையும் ஒரே கப்ரில் நல்லடக்கம் செய்யுங்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: அப்துல்லாஹ் பின் அம்ர் செந்நிறமுடையவராக இருந்தார்கள். மேலும், அவர்களின் தலையில் முன்பக்கம் தலைமுடி இருக்கவில்லை. மேலும் அதிகம் உயரமானவராக இருக்கவில்லை. ஆனால், ஹஸ்ரத் அம்ர் பின் ஜமூஹ் (ரலி) உயரமானவராக இருந்தார்கள். (அப்துல்லாஹ்) அவர்கள் அதிகம் உயரமானவராக இருக்கவில்லை. ஆனால், அம்ர் பின் ஜமூஹ் உயரமானவராக இருந்தார்கள். எனவே இருவரும் அடையாளம் காணப்பட்டனர். இருவரையும் ஒரே கபரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது நாளன்று என் தந்தையார் ஹஸ்ரத நபி (ஸல்) அவர்களிடம் உருவம் சிதைக்கப்பட்டவராகக் கொண்டு வரப்பட்டார்கள். அதாவது உடல் உறுப்புகள் வெட்டப்பட்டிருந்தன. குறிப்பாக, காது மூக்கு ஆகியவை. இவர்களின் உடல் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்பு வைக்கப்பட்டது. அவர்கள் கூறுகின்றார்கள்; நான் அவர்களது முகத்தில் இருந்து துணியை அகற்ற முற்பட்ட போது மக்கள் என்னைத் தடுத்து விட்டார்கள். பிறகு மக்கள் ஒரு பெண் கத்தும் குரலைக் கேட்டார்கள். அப்பொழுது,இவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அமர் (ரலி) அவர்களின் மகளாவார்;. இவரது பெயர் ஹஸ்ரத் ஃபாத்திமா பின்த் அம்ர் ஆகும் என்று ஒருவர் கூறினார். அல்லது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி)அவர்களின் சகோதரியாக இருந்தார்கள் என்றும் கூறபடுகின்றது.

இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அழாதீர் ஏனெனில், வானவர்கள் தொடர்ச்சியாக அவர் மீது தம்முடைய இறக்கைகளால் நிழலிட்டுள்ளார்கள். அவரோ சொர்க்கத்தில் சென்றுள்ளார். நற்பேறு பெற்றவர். அவரைப் பார்த்து அழ வேண்டிய தேவையில்லை.

மற்றோர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: என் தந்தையாரை உஹது அன்று கொண்டு வரப்பட்டபோது, என் தந்தையின் சகோதரியும் அவரைப் பார்த்து அழ ஆரம்பித்தார். அப்பொழுது நானும் அழ ஆரம்பித்தேன். மக்கள் என்னைத் தடுக்க ஆரம்பித்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னைத் தடுக்கவில்லை.

பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அவரைப் பார்த்து அழாதீர்கள்; எந்த வித்தியாசமும் ஏற்படாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! வானவர்கள் அவர் மீது தொடர்ச்சியாக தம்முடைய இறக்கைகளால் நிழலிட்டிருந்தார்கள். எதுவரை என்றால், நீங்கள் அவரை நல்லடக்கம் செய்து விட்டீர்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா அல்பக்கராவின் வசனத்துக்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகின்றான்: எந்த முஸ்லிம்கள் ஷஹீது ஆகிவிட்டார்களோ நீங்கள் அவர்களை மரணித்தவர்கள் என்று கூறாதீர்கள். அவர்கள் இறைவனின் உயிருள்ள போர் வீரர்கள் ஆவார்கள். இறைவன் அவர்களுக்காக கண்டிப்பாக பழிவாங்குவான்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்; பாருங்கள்! ஒரு ஸஹாபி கொல்லப்பட்டார் என்றால், அதற்குப் பதிலாக இணை வைப்பாளர்களின் ஐந்து ஐந்து பேர் கொல்லப்பட்டனர். எல்லாப் போர்களிலும் முஸ்லிம்களைக் காட்டிலும் நிராகரிப்பாளர்கள் மிக அதிகமாக அழிந்து போனார்கள். உஹது போரைத் தவிர. அதில் முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டனர். ஆனால், அவர்களுக்காகவும் அல்லாஹ் மற்ற போர்களில் பழிவாங்கி விட்டான்.

உஹது போருக்குப் பிறகு பலவீனம் காரணமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்றைய தினம் அமர்ந்து தொழுகையை நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பலவீனம் காரணமாக அமர்ந்து தொழுதார்கள். அன்னார் (ஸல்) தொழ வைத்தது லுஹர் தொழுகை ஆகும். அன்னாருக்குப் பின்னால் ஸஹாபிகளும் உட்கார்ந்தே தொழுகையை நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமர்ந்து கொண்டு தொழ வைத்ததால் ஸஹாபிகளும் பின்னால் உட்கார்ந்தே தொழுதார்கள்: எழுந்து நிற்கவில்லை.

எழுதுபவர் எழுதுகிறார்: அநேகமாக இந்தத் தொழுகை எதிரிகள் திரும்பிச் சென்ற பிறகு தொழப்பட்டது. ஸஹாபிகளும் அமர்ந்து கொண்டு தொழுததைப் பொருத்த வரை இமாம் மற்றும் பின்னால் நின்று தொழுபவர்களின் தொழுகைகள் ஒன்றுபோல் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்தார்கள். அதற்குப் பிறகு இந்தக் கட்டளை ரத்தாகி விட்டது. அதாவது, (அமர்ந்து தொழ வேண்டிய) அவசியமில்லை. பின்னால் நின்று தொழுபவர்கள் நின்று கொண்டு தொழலாம். அல்லது இந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். இதுவும் கூறப்படுகிறது. எழுதுபவர் இவ்வாறு கணிக்கிறார்; அமர்ந்து தொழாதவர்களும் காயமடைந்தவர்களாகவே இருந்திருப்பார்கள். காயமடைந்த ஸஹாபிகள் பெரும்பான்மையாக இருந்தார்கள். அவர்கள் உட்கார்ந்து தொழுதார்கள். எனவேதான் முஸ்லிம்கள் உட்கார்ந்து தொழுதார்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, அவர்களில் நின்று கொண்டு தொழுதவர்களும் இருந்தார்கள். ஆனால், அவர்கள் காயமடைந்தவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் உட்கார்ந்து தொழுதார்கள் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அவர்களில் நின்று கொண்டு தொழுதவர்களும் இருந்தார்கள். ஆனால், காயமடையாதவர்கள் மட்டும்தான் அப்படி (நின்று) தொழுதார்கள். எனவே பெரும்பாலானவர்களைக் கருத்தில் கொண்டவாறு பின்னால் நின்று தொழுபவர்கள் உட்கார்ந்து தொழுதார்கள் என்று கூறப்பட்டு விட்டது. ஸீரத்துல் ஹலபிய்யாவின் சான்றாகும்.

உஹது போரில் ஷஹீதானவர்களின் எண்ணிக்கை பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது; உஹது போரில் முஸ்லிம் ஷஹீதுகளின் எண்ணிக்கையைப் பொருத்த வரை அன்று கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 70-ஆக இருந்தது என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கூற்றாகும்.

அவர்களில் நான்கு பேர் முஹாஜிர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு: ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஷமாஸ் பின் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆகியோர்.

ஒரு கூற்று இவ்வாறு உள்ளது: உஹது போரில் ஷஹீதானவர்களின் மொத்த எண்ணிக்கை 80 ஆக இருந்தது. அவர்களில் 74 பேர் அன்ஸாரிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். 6 பேர் முஹாஜிர்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அல்லாமா இப்னு ஹிஜ்ர் அஸ்கலானீ அவர்கள் கூறுகின்றார்கள்: 7 முஹாஜிர்கள் ஷஹீது ஆகியிருந்தார்கள் என்றால் ஐந்தாவது ஹாத்திப் பின் பல்தஆ (ரலி) அவர்களின் அடிமை ஸஃதும், ஆறாவது பனூ அப்தி ஷம்ஸ் கோத்திரத்தின் நட்புக் கோத்திரத்தைச் சேர்ந்தவரான ஃஸகீப் பின் அம்ர் ஆகியோரும் இருந்தார்கள்.

உயூனுல் அஸ்ர் என்ற ஒரு நூல் இருக்கின்றது. அதில் ஷஹீதானவர்களின் மொத்த எண்ணிக்கை 96 என்று கூறப்பட்டுள்ளது. இணை வைப்பாளர்களில் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கை 23 ஆக இருந்தது. ஒரு கூற்று இவ்வாறு உள்ளது: இணை வைப்பாளர்களின் இந்த எண்ணிக்கை 22 ஆக இருந்தது.

ஓர் அறிவிப்பு இவ்வாறும் உள்ளது: அந்தப் போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் தனியாக 31 இணை வைப்பாளர்களைக் கொன்றார்கள். இந்த அறிவிப்பு சரியானதாகத் தெரியவில்லை. ஏனெனில், அவர்களின் மரணித்தவர்களின் மொத்த எண்ணிக்கையே 23 ஆக இருந்தது. ஒரு வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் உஹதின் ஷஹீதுகளின் எண்ணிக்கை பற்றி இவ்வறு எழுதுகிறார்: உஹது போரில் காஃபிர்களின் கைகளால் ஷஹாதத் எனும் கண்ணியத்தின் நெருக்கத்தைப் பெற்ற ஸஹாபா பெருமக்களின் எண்ணிக்கை பற்றி பல்வேறு கூற்றுகள் உள்ளன. வரலாற்று அறிஞர்கள், வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் கண்ணியத்திற்குரிய ஹதீஸ் தொகுப்பாளர்கள் ஆகியோர் பார்வையில் உஹதின் ஷஹீதுகளின் எண்ணிக்கை தொடர்பாக 49 லிருந்து 108 வரையிலான கூற்றுகள் உள்ளன. ஆனால், உஹது நாளன்று 70 ஸஹாபிகள் ஷஹீதானார்கள் என்பதே பெரும்பான்மையா(ன கூற்றா)கும்.

உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை மற்றும் நல்லடக்கம் பற்றிய குறிப்பு கிடைக்கிறது. உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை பற்றி பல்வேறு கருத்துகள் உள்ளன. ஸஹீஹ் புகாரியின் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது:

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளிலிருந்து இரண்டு, இரண்டு நபர்களை ஒரே ஆடையில் ஒன்றாக வைப்பார்கள். பிறகு, இவர்களில் திருக்குர்ஆனை அதிகமாக அறிந்திருந்தவர் யார்? என்று கேட்பார்கள். பிறகு அவர்களில் ஒருவர் பக்கம் சுட்டிக்காட்டப்படும் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரைக் கப்ரில் முதலில் வைப்பார்கள். ஒரே ஆடையில் இருந்தார்கள் என்றால் அப்பொழுதும் வலமும், இடமும் என வைத்திருப்பார்கள். முதலில் அவரை நல்லடக்கம் செய்யப்படும். பிறகு மற்றவரை அவருடனே நல்லடக்கம் செய்யப்படும். பிறகு அன்னார் இவ்வாறு கூறி வந்தார்கள்: நான் கியாமத் நாளன்று இந்த மக்களுக்கு சாட்சியாளனாக இருப்பேன்.

மேலும் அவர்களின் இரத்தத்துடனேயே அவர்களை நல்லடக்கம் செய்யுமாறு கட்டளை பிறப்பித்து வந்தார்கள். அவர்களை நீராட்டவும் செய்யவில்லை ; அவர்களது ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை. ஸஹீஹ் புகாரியில் மற்றோர் அறிவிப்பிலும் உள்ளது. மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒருநாள் வருகை தந்தார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஒரு ஷஹீதின் ஜனாஸா தொழுகை தொழுதார்கள். புகாரியின் பிரிதோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையை உஹது போருக்கு 8 ஆண்டுகள் கழித்து தொழுதார்கள். இங்கு பல்வேறு அறிவிப்புகள் முன் வந்துள்ளன. அறிவிப்பாளர்கள் முன்வைத்தவை, முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அப்பொழுது ஜனாஸா தொழுகை தொழப்படவில்லை ; பின்னர் எப்பொழுதோ தொழப்பட்டது என்று தெரிகிறது.

ஸுனன் இப்னு மாஜாவில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போரின் ஷஹீதுகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன் கொண்டு வரப்படும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் 10, 10 ஷஹீதுகளின் ஜனாஸா தொழுவார்கள். மேலும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மய்யித் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்களுக்கு அருகிலேயே இருந்தது. ஆனால், மற்ற ஷஹீதுகளை எடுத்துச் செல்லப்படும்.

இதில் இவர்களுக்குத் தவறான புரிதல் ஏற்பட்டிருக்கலாம். ஸுனன் அபூதாவூதில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போரின் ஷஹீதுகள் நீராட்டப்படவில்லை. அவர்களை அவர்களது இரத்தம் அதாவது காயங்களுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர்களில் எவருக்கும் ஜனாஸா தொழுகை தொழ வைக்கப்படவில்லை. ஸுனன் அபூ தாவூதின் ஓர் அறிவிப்பிலேயே இவ்வாறு வருகிறது; ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைத் தவிர வேறு எந்த ஷஹீதின் ஜனாஸாவிற்கு தொழ வைக்கவில்லை.

ஸுனன் திர்மிதியின் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையைத் தொழ வைக்கவில்லை. தொழ வைக்கவில்லை என்பதே பெரும்பான்மையா(ன கூற்றா)கும்.

ஸீரத் இப்னு ஹிஷ்ஷாம் மற்றும் ஸீரத்துல் ஹல்பியா ஆகிய நூல்களில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையை இவ்வாறு தொழ வைத்தார்கள். அதாவது, எல்லாருக்கும் முதலாக ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகை தொழ வைக்கப்பட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகையில் ஏழு தக்பீர்களைக் கூறினார்கள். ஸீரத்துல் ஹலபிய்யாவுக்கு ஏற்ப, நான்கு தக்பீர்களைக் கூறினார்கள்.

இதற்குப் பிறகு மற்ற ஷஹீதுகளை ஒவ்வொருவராகக் கொண்டு வரப்படும். ஹஸ்ரத் ஹம்ஸா(ரலி) அவர்களின் மய்யித்துடன் வைக்கப்படும். பிறகு, அன்னார் (ரலி) இருவரின் ஜனாஸா தொழுகை தொழ வைப்பார்கள். இவ்வாறு எல்லா ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை ஒருமுறையும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகை 72 முறையும், சிலரது பார்வையில் 92 முறையும் தொழ வைக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும் இந்த அறிவிப்புகளோ எழுதப்பட்டுள்ளன. ஆனால், ஒரு சில அறிவிப்புகள் பலவீனமானவையும் ஆகும்.

தலாயிலுந் நுபுவ்வஹ் எனும் ஒரு வாழ்க்கை வரலாற்று நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் மய்யித்துக்கு அருகில் 9 ஷஹீதுகள் ஒன்றாக் கொண்டு வரப்படுவார்கள். அவர்களுக்கு ஜனாஸா தொழுகை தொழ வைக்கப்படும். பிறகு அந்த 9 பேரை எடுத்துச் செல்லப்படும். மேற்கொண்டு 9 ஷஹீதுகளைக் கொண்டு வரப்படும். ஆக, இவ்வாறு அந்த ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்பட்டது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு முறையும் ஜனாஸா தொழுகையில் 7 தக்பீர்களைக் கூறினார்கள்.

ஸீரத்துல் ஹலபிய்யா மற்றும் தலாயிலுந் நுபுவ்வஹ் போன்ற நூல்களில் உஹது போர் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை தொடர்பான நபிமொழிகளை பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விரண்டு நூல்களிலும் , ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளை அவர்களின் இரத்தத்துடன் நல்லடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். அவர்கள் நீராட்டப்படவுமில்லை ; அவர்களின் ஜனா'ஸா தொழுகையும் தொழப்படவில்லை என்ற ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பை மிகவும் உறுதியானதாகக் கூறியுள்ளார்கள். ஆக, ஜனாஸா தொழ வைக்கப்படவில்லை என்பதே இதிலிருந்து கிடைக்கும் இறுதியான தீர்வாகும்.

ஹஸ்ரத் இமாம் ஷாஃபீ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தொடர்ச்சியான அறிவிப்புகளிலிருந்து ஒரு விஷயம் உறுதியான முறையில் தெரிய வருகிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையைத் தொழ வைக்கவில்லை.

எந்த அறிவிப்புகளில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை தொழுதார்கள் என்றும், ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களுக்கு 70 தக்பீர்கள் கூறினார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த விஷயம் சரியானதல்ல. ஹுஸூர் (ஸல்) அவர்கள் 8 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ஷஹீதுகளின் ஜனாஸா தொழுதார்கள் என்ற ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்களின் அறிவிப்பைப் பொருத்த வரை அந்த அறிவிப்பில் இது 8 ஆண்டுகளுக்குப் பிறகுள்ள சம்பவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது 8 ஆண்டுகளுக்குப் பிறகுள்ள சம்பவம் என்றும் எழுதப்பட்டுள்ளது. இது அப்பொழுது நடந்ததல்ல. இமாம் புகாரி அவர்கள் தமது நூலில் பாபுஸ் ஸலாத்தி அலஷ் ஷஹீது அதாவது ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை என்ற தலைப்பில் அதிகாரம் அமைத்துள்ளார்கள். அதற்குக் கீழ் வெறும் இரண்டு ஹதீஸ்களைக் கொண்டு வந்துள்ளார்கள். முதல் ஹதீஸ் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி)அவர்கள் அறிவித்துள்ளதாகும். அதில், உஹது போரின் ஷஹீதுகள் நீராட்டப்படவுமில்லை ; அவர்களுக்கு ஜனாஸா தொழுகையும் தொழ வைக்கப்படவில்லை என்று தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இரண்டாவது ஹதீஸ் ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளதாகும். அதில் அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்;

أَنَّ النَّبِيَّ خَرَجَ يَوْمًا فَصَلَّى
عَلَى أَهْلِ أُحُدٍ صَلَاتَهُ عَلَى الْمَيِّتِ

பொருள்: ஒருநாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வருகை தந்தார்கள். உஹது போரின் ஷஹீதுகளுக்காக ஜனாஸா தொழுகையை தொழுதார்கள்.

இந்த ஹதீஸே புகாரியில் வந்துள்ளது. இதுவே வேறு இடத்தில் உஹது போரின் அதிகாரத்தில் வந்துள்ளது. அங்கு இதே ஸஹாபி அறிவிக்கின்றார்கள். மேலும், இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்:

صَلَّى رَسُوْلُ اللهِ عَلَى قَتْلَى
أُحُدٍ بَعْدَ ثَمَانِي سِنِيْنَ
كَالْمُوَدِّعِ لِلْأَحْيَاءِ وَالْأَمْوَاتِ

பொருள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹது போரின் ஷஹீதுகளுக்காக 8 ஆண்டுகளுக்குப் பிறகு உயிருள்ளவர்களுக்கோ அல்லது மரணித்தவர்களுக்கோ விடை கொடுப்பது போன்று தொழுதார்கள். இவ்வாறே அல்லாமா இப்னு ஹஜர் அஸ்கலானீ அவர்கள் கூறுகின்றார்கள்: இமாம் ஷாஃபீ அவர்கள் கூறியிருக்கும் இந்த விஷயத்திற்குப் பொருளாவது ஒருவருடைய மரணத்திற்கு நீண்ட காலம் கழிந்து விட்ட பிறகு, அவருடைய கப்ரில் ஜனாஸா தொழப்படுவதில்லை. இமாம் ஷாஃபீ அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தாம் உலகை விட்டுச் செல்லும் காலம் அண்மையில் இருக்கின்றது என்பது தெரிய வந்த போது, அன்னார் அந்த ஷஹீதுகளின் கப்ருகளுக்குச் சென்று அவர்களுக்கு விடை கொடுத்தவாறு அவர்களுக்காக துஆ செய்தார்கள். மேலும், அவர்களுக்காக பாவமன்னிப்பு வேண்டினார்கள்.

ஜமாஅத்தின் கொள்கையும் இதுவே ஆகும். இதை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்: ஆக, அந்த நேரத்தில் ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்படவில்லை. இதுவோ தெளிவான விஷயம் ஆகும். உஹது போரின் ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு சாதகமாகவே அறிவிப்புகள் உள்ளன. அன்னாரும் இதைத் தான் எழுதியுள்ளார்கள். அதாவது ஜனாஸா தொழுகை நிறைவேற்றப்படவில்லை. ஆனால், பிற்காலத்தில் வஃபாத் காலத்துக்கு அருகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரண காலம் நெருங்கியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக, உஹது போரின் ஷஹீதுகளுக்கு ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். மேலும், மிகவும் வேதனை மிக்க உள்ளத்தோடு அவர்களுக்காக துஆ செய்தார்கள். இது மட்டுமின்றி, இதைப் பற்றிய இன்னும் சில குறிப்புகளும் உள்ளன. மற்றவை இனி (எடுத்துரைக்கப்படும்) இன்ஷா அல்லாஹ்!

உலகத்தின் நிலைமைகளைப் பற்றி சிறிது கூறிவிடுகின்றேன். போர்த் தீயோ பரவிக் கொண்டே செல்கின்றது. மனிதத்துவம் அழிவிலிருந்து தப்பிப்பதற்காக அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டிய தேவை உள்ளது. உண்மையில், அஹ்மதிகள் சரியான முறையில் துஆ செய்தால்தான் இதற்கு ஏதாவது செய்ய முடியும். இஸ்ரேல் அரசாங்கம் தனது பிடிவாதத்தில் நிலைத்து நிற்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் இது காரணமாக அமைந்தது; இதனால் நாங்கள் இவ்வாறு செய்தோம் என்று அவர்கள் தங்களுடைய ஏதாவது சாக்குப் போக்கை, காரணத்தைத் தேடிக் கூறிவிடுகின்றனர்.

அறிவுபூர்வமான எந்த விஷயத்தையும் ஏற்பதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை. உலகத்தின் ஆற்றல் படைத்த மற்ற அரசாங்கங்கள் தங்களுடைய விருப்பத்தாலோ அல்லது இஸ்ரேலைப் பார்த்து பயந்தோ இஸ்ரேலின் பிரதமர் அல்லது அரசு என்ன அறிக்கை விட்டாலும் சரி; இவர்கள் முதலில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் ; அநீதி முடிவுக்கு வரவேண்டும் என்று தங்களது அறிக்கையை விடுகின்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் அறிக்கை விட்டதும் அதற்கு உடன் நிற்கின்றார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் முஸ்லிம்கள் மீதும் கருணை புரிவானாக! இவர்களையும் அல்லாஹ்வின் பக்கம் குனியச் செய்வானாக! இது ஒன்று மட்டுமே வழியாகும். அதன் அடிப்படையிலேயே இவர்கள் தம்முடைய இம்மையையும், மறுமையையும் சீர்படுத்திக் கொள்ள முடியும். எல்லாம் வல்ல அல்லாஹ் இவர்கள் மீது கருணை புரிவானாக! நமக்கும் துஆ செய்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நம் மீதும் கருணை புரிவானாக!

தமிழாக்கம்
மவ்லவி
அத்தாவுல் முக்ஃனீ

* * * * *

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

# ஜுமுஆ பேருரை

**வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி குறித்த முன்னறிவிப்பின் சில அம்சங்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அருளுக்குரிய இருப்பின் மீது முழுமையடைந்ததன் பின்னணியில் நீதியை விரும்பக் கூடிய மற்றும் ஜமாஅத்தைச் சாராத சில சகோதரர்களின் தாக்கங்கள்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் 52 ஆண்டு கால கிலாஃபத் காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியததற்கான அடையாளத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது

**நான் இன்று வரை இதுபோன்ற அறிவுப்பூர்வமான உரையாடலையும் ஆதாரப்பூர்வமான உரையையும் எந்தவொரு முஸ்லிமுடைய நாவிலிருந்தும் செவிமடுத்ததில்லை. உங்களது கலீஃபா மாபெரும் அறிஞர் ஆவார் என்றும் மார்க்க உலகில் அவரது பார்வை மிகவும் ஆழமானது என்றும் தெரிய வருகின்றது ( அமெரிக்க பாதிரியார்)**

**பாகிஸ்தான் மற்றும் ஏமனின் அஹ்மதிகளுக்காகவும், பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆ செய்வதற்கான அறிவுரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 23 பிப்ரவரி 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **23ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்று முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு தொடர்பான சில அம்சங்களை நான் எடுத்துரைப்பேன். ஒவ்வோர் அஹ்மதியும் அறிந்தது போன்று இந்த முன்னறிவிப்பு முழுமையடைந்து விட்டதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் கூட்டங்கள் (ஜமாஅத்தில்) நடத்தப்படுவதுண்டு. இந்த முன்னறிவிப்பு 1886-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி இறங்கியதாகும். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு ஏராளமான நற்பண்புகளைக் கொண்ட மகனின் பிறப்புக் குறித்து செய்தி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இதைப் பற்றி கூறுவதற்கு முன்னர் சில பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் இந்தக் கேள்விக்கான பதிலை கொடுக்க விரும்புகின்றேன். முன்னரும் பலமுறை நான் பதில் கொடுத்திருக்கின்றேன். அந்தக் கேள்வி என்னவென்றால், நாம் பிறந்தநாளைக் கொண்டாடுவது கிடையாதே? அவ்வாறிருக்க நாம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் பிறந்த நாளை ஏன் கொண்டாடுகின்றோம்? என்று அவர்கள் கூறுகின்றனர். இதைப் பற்றி நான் தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால், நான் இதற்கு முன்னரும் கூறியிருந்தது போன்று ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்படுவது கிடையாது. மாறாக, முன்னறிவிப்பு நிறைவேறியதன் காரணமாக கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பிறந்த நாள் ஜனவரி 12, 1889 ஆகும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், எந்த குடும்பங்களில் இது குறித்து பேசப்படுவது கிடையாதோ அங்கு பெற்றோர்கள் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு என்றால் என்ன? என்பதைப் பற்றி தெரிந்து கொண்டு குழந்தைகளுக்கும் கூற வேண்டும்; புரிய வைக்க வேண்டும். இதுவொரு மாபெரும் முன்னறிவிப்பு ஆகும். இதைக் குறித்து முந்தைய நபிமார்களும் செய்தி வழங்கியுள்ளார்கள். முந்தைய ஏடுகளிலும் செய்தி காணப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் முன்னறிவித்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இதை அறிவிக்குமாறு அல்லாஹ் கட்டளை வழங்கியுள்ளான். இது ஒரு நீண்ட முன்னறிவிப்பு ஆகும். அதன் ஆரம்பப் பகுதியை நான் உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மேன்மையும், கம்பீரமும் மிக்க கருணை கொண்ட அல்லாஹ் தனது இறையறிவிப்பின் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்: அதாவது நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க அருளின் ஓர் அடையாளத்தை நான் உமக்கு வழங்குகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். மேலும் நான் எனது அருட்களால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். லூதியானா மற்றும் ஹோஷியார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கினேன். எனவே ஆற்றல், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றி பெற்றவரே! உம் மீது சாந்தி உண்டாகுவதாக! வாழ்வை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வருவதற்காகவும் இறைவன் இதைக் கூறியிருக்கின்றான். மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு மற்றும் அல்லாஹ்வின் அந்தஸ்து மக்களுக்கு வெளிப்படுவதற்காகவும் உண்மை தனது எல்லா அருட்களுடன் வந்து விடுவதற்காகவும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான். மேலும் நான் ஆற்றல் மிக்கவன் - அதாவது இறைவன் கூறுகின்றான்: நான் ஆற்றல் மிக்கவன் என்றும், நான் விரும்பியதை செய்கின்றவன் என்றும் மக்கள் புரிந்து கொள்ளட்டும்; நான் உம்முடன் இருக்கின்றேன் என்று அவர்கள் உறுதி கொள்ளட்டும். மேலும் எவர்கள் இறைவனுடைய இருப்பு பற்றி நம்பிக்கை கொள்வதில்லையோ மேலும், இறைவனுடைய மார்க்கத்தையும், அவனுடைய வேதத்தையும், அவனுடைய தூய தூதர் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு தெளிவான ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் குற்றவாளிகளின் வழிகளை வெளிப்படுத்துவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான். எனவே உமக்கு ஒரு நற்செய்தி ; கம்பீரமான ஒரு தூய மகன் உமக்கு வழங்கப்படுகின்றான். ஓர் அழகிய தூய மகன் உமக்கு கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்து உமது சந்ததியின் வழித்தோன்றலாக இருப்பார்.

பிறகு அடுத்ததாக, அந்த முன்னறிவிப்பில் அந்த (வாக்களிக்கப்பட்ட) மகனுடைய தனிச் சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றிரண்டை நான் எடுத்துக் கூறுவனே்.

அல்லாஹ் கூறினான்: அவர் மிகவும் புத்திக் கூர்மையுடையவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். அவர் வெளிப்புறமான மற்றும் உட்புறமான ஞானங்களால் நிரப்பப்படுவார். கைதிகளை விடுவிப்பதற்கு அவர் காரணமாக திகழ்வார்.

இது ஒரு நீண்ட முன்னறிவிப்பில் உள்ள சில விஷயங்கள் ஆகும். அல்லாஹ்விடமிருந்து செய்தியை பெற்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறிய அந்த காலகட்டத்திற்குள் அந்த மகன் பிறந்ததை நாம் கண்டோம். மேலும் முன்னறிவிப்பின் அனைத்து அம்சங்களுக்கும் உரியவராக அவர் திகழ்ந்தார். அதனுடைய எண்ணிக்கை 50, 52 ஆக இருக்கின்றது.

எவ்வாறு இருப்பினும் நான் முன்னரே கூறியதுபோன்று அந்த முன்னறிவிப்பிலிருந்து இரண்டு, மூன்று விஷயங்களை மட்டும் நான் எடுத்துரைக்கின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி)

அவர்களின் 52 கால கிலாஃபத் காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியதை மகத்துவத்துடன் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆனால், அஹ்மதிகள் இந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டதாக சான்றுகள் கொடுக்கத்தானே செய்வார்கள்; முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டது என்று கூறிக் கொண்டுதானே இருப்பார்கள். ஆயினும் ஓர் அழுத்தமான சான்றை எடுத்து வையுங்கள் என்று எதிர்க்கக் கூடிய ஒருவர் நம்மை ஏற்றுக் கொள்ளாத ஒருவர் கேட்கலாம். இது ஆட்சேபனை செய்யக் கூடியவர்களின் முரட்டுப் பிடிவாதம் ஆகும். இல்லையென்றால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தின் ஒவ்வொரு நாளும் நான் முன்னரே கூறியதுபோன்று அதற்கு தெளிவான சான்றாக உள்ளது. எவ்வாறு இருப்பினும், முன்னறிவிப்பு தொடர்பாக நான் எந்த விஷயத்தை எடுத்துக் கூறினேனோ அது தொடர்பாக ஜமாஅத்துடன் எந்தத் தொடர்பும் இல்லாத நீதியை விரும்பக் கூடிய மக்களின் சாட்சியங்களை நான் எடுத்துக் கூறுகின்றேன். மேலும் இந்திய துணைக் கண்டத்தில் அவர்கள் மிகவும் பிரபலமான நபர்களாக இருக்கின்றனர்.

மவ்லானா குலாம் ரஸூல் ஸாஹிப் மஹ்ர் என்பவர் நன்கு அறியப்பட்ட நபர் ஆவார்.1885-ஆம் ஆண்டு ஜலந்தரில் பிறந்தவர் ஆவார். இவர் ஓர் ஆய்வாளரும், எழுத்தாளரும், இலக்கியவாதியும், பத்திரிகையாளரும், வரலாற்று ஆசிரியரும் ஆவார். ஜமீன்தார் என்ற ஒரு தினசரி பத்திரிகையைச் சேர்ந்தவருமாக இருந்தார். பிற்காலத்தில் இவர் மவ்லானா அப்துல் மஜீத் ஸாலிக் என்பவருடன் இணைந்து லாஹூரிலிருந்து இன்கிலாப் எனும் பத்திரிகையை வெளியிட்டார். 20 மற்றும் 25 டிசம்பர் 1966 அன்று லாஹூரைச் சேர்ந்த ஷேக் அப்துல் மாஜித் ஸாஹிபை சந்திக்கச் சென்றார்கள். அப்போது நடைபெற்ற கலந்துரையாடலின்போது மவ்லானா குலாம் ரஸூல் மஹ்ர் ஸாஹிப் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி)அவர்களைக் குறித்து பேசினார்கள். உங்களுடைய எந்தவொரு நூலிலும் இந்த மகத்துவ மிக்க மனிதரின் சாதனைகளைப் பற்றிய முழுமையான தகவல்கள் கிடைப்பதில்லையே ; நாங்கள் அவரை அருகில் இருந்து பார்த்தோம். பலமுறை சந்தித்துள்ளோம். தனிப்பட்ட முறையில் கருத்துப் பரிமாற்றங்களை செய்து கொண்டுள்ளோம்; முஸ்லிம் சமுதாயத்திற்கு அன்னாரின் இருப்பு முழுக்க, முழுக்க தியாகத்தை கொண்டதாக இருக்கின்றது என்று அன்னார் கூறினார்கள். பிறகு அவர் கூறினார்: ஒருமுறை இரவோடு, இரவாக காதியானிற்கு சென்று அன்னாருடன் கலந்தாலோசனை செய்ய நேரிட்டது. அந்தப் பயணம் தற்போதும் எனது கண்களுக்கு முன்னால் உள்ளது. மனிதகுலத்திற்காக அந்த நபருடைய உள்ளத்தில் மாபெரும் வேதனை இருந்தது. அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் உள்ளத்தில் பெரும் வேதனை இருந்தது. அவர் கூறுகின்றார்: எங்கெல்லாம் முஸ்லிம் சமுதாயத்தின் முன்னேற்றம் மற்றும் நன்மை சம்பந்தமான விவகாரங்களை சந்திக்க நேர்ந்ததோ அங்கு அன்னாருடைய செயல்படுத்த தகுந்த ஆலோசனைகள் நம்முடைய துணிவை அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றன. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அன்னாருடைய ஒவ்வொரு அங்கமும் சமுதாயத்தின் வேதனையில் துடித்து விடுவதை காண முடிகின்றது. பிரிவினை எனும் மதத்துவேஷத்தை அன்னாருடைய இருப்பில் பெயரளவிற்கு கூட நான் காணவில்லை. மிர்ஸா ஸாஹிப் அவர்கள் மிகவும் மதிநுட்ப மிக்க மனிதராக இருந்தார்கள்.

அவர் புத்திக் கூர்மை கொண்டவராகவும், நுட்பமான அறிவை கொண்டவராகவும் திகழ்வார் என்று முன்னறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. ஜமாஅத் அல்லாத மக்களும் இதற்கான சாட்சியத்தை வழங்குகின்றனர். பிறகு, அந்த கலந்துரையாடலை தொடர்ந்தவாறு அவர் கூறுகின்றார்: நான் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் அரசியல் அளவிலும், மார்க்க அளவிலும் இவரைப் போன்ற அறிவைக் கொண்ட practical politics-ல் பணியாற்றுகின்ற ஒரு தலைவரை நான் கண்டதில்லை.தன்னலமற்ற முறையில் ஆலோசனைக் கூறுவது, தெளிவான முறையில் கருத்துகளை எடுத்துரைப்பது, செயல் திட்டங்களை சரியான சொற்களில் எடுத்துக் கூறுவது ஆகியவை அன்னாரின் தனிச் சிறப்புகளாக இருந்தன. அன்னாரின் மரணச் செய்தியை கேட்டு எனக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. அவர் கூறுகின்றார்: நான் இஸ்மாயீல் ஸாஹிப் பானிபட் அவர்களுக்கு இரங்கல் கடிதத்தை அனுப்பி வைத்தேன். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் தொடர்பாக இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ள வாக்கியங்களை அவர் வெளியிட்டுக் கொள்ளலாம் என்றும் நான் அந்தக் கடிதத்தில் எழுதி விட்டேன். பிறகு அவர் கூறுகின்றார்: அந்தோ பரிதாம் ! முஸ்லிம்கள் மிர்ஸா ஸாஹிப் அவர்களுக்கு மதிப்பளிக்கவில்லை. கடுமையான எதிர்ப்புகள் இருந்தபோதிலும் மிர்ஸா ஸாஹிப் அவர்கள் மனச்சோர்வு அடைந்ததாகவோ, தளர்ந்து விட்டதாகவோ நான் ஒருபோதும் கண்டதில்லை. மிர்ஸா ஸாஹிப் அவர்களுடைய உள்ளத்தின் விளக்கு மிகவும் ஒளிமயமானதாக இருந்தது. நாங்கள் மிகவும் மனச்சோர்வு அடைந்து துக்கத்துடன் அன்னாரை சந்திக்கச் செல்வோம். ஆனால், சந்தித்துவிட்டு வெளியே வரும்போது நிராசையின் மேகங்கள் கலைந்து போனதாகவும், குறிக்கோளின் வெற்றி முன்னால் தெரிவதைப் போன்றும் நாங்கள் வெளியே வருவோம். வலுவான சான்றுகளை வழங்குவார்கள். செயல்படுத்த தகுந்த விஷயங்களை கூறுவார்கள். அது மட்டுமின்றி எல்லா வகையான தியாகங்கள் மற்றும் ஆதரவுகளையும் முன்னெடுத்து வைப்பார்கள். அதன் காரணமாக எங்களிடம் துணிவு மற்றும் தைரியம் போன்றவை பிறந்து விடும்.

அடுத்து, காஷ்மீரின் முன்னாள் தலைமை நீதிபதி லாலா கமர் சிங் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடர்பாக தமது கருத்தை கூறுகின்றார்கள்: லாலா கமர் சிங் ஸாஹிப் லாலா பீம் ஸீம் ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். உலக மொழிகளில் அரபி மொழியின் அந்தஸ்து என்ற தலைப்பில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சொற்பொழிவிற்கு பிறகு, தலைமை வகித்தவர் நன்றி கூறியதற்கு பிறகு, சிறப்பான நன்றியை தெரிவித்த வண்ணம் ஆங்கிலத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அதன் கருத்து என்னவென்றால், அவர்கள் கூறினார்கள்:

இன்று, சொற்பொழிவாளர் அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அரபி மொழியின் மேன்மையைக் குறித்து உள்ளத்தை கவரும் வகையிலும், அசாதாரணமான வகையிலும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதனை செவியுற்று எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. தனிப்பட்ட முறையிலும் நான் அன்னாருடன் தொடர்பு கொண்டுள்ளேன் என்பதற்காகவும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஏனெனில், அன்னாரின் தந்தையிடமிருந்து எனது தந்தை அரபி கற்றுக் கொண்டுள்ளார்கள். அதாவது லாலா ஸாஹிபுடைய தந்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடமிருந்து அரபி கற்றிருந்தார்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் சொற்பொழிவைக் கேட்பதற்காக வந்தபோது பழைய நடைமுறையின்படி மக்கள் எவ்வாறு சொற்பொழிவு ஆற்றுவார்களோ அதேபோன்று தான் இன்றைய கருத்தும் எடுத்துரைக்கப்படும் என்ற சிந்தனையுடன் நான் வந்தேன். ஓர் அரேபியரிடம் அரபி மொழியின் மேன்மைக்கான காரணங்களைக் குறித்து கேட்கப்பட்டபோது அவர் இவ்வாறு கூறினாராம்; அதாவது, அரபி மொழியின் சிறப்பிற்கு மூன்று விஷயங்கள் உள்ளன. முதல் விஷயம் நான் அரேபிய நாட்டைச் சார்ந்தவன் ஆவேன். இது அரபி மொழியின் மேன்மையாகும். இரண்டாவது விஷயம் என்னவென்றால் இது திருக்குர்ஆனின் மொழியாகும்.

இந்த கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், சொர்க்கத்திலும் அரபி மொழிதான் பேசப்படும் என்று அந்த நபர் கூறினாராம். ஆகவே, இதுபோன்ற விஷயங்கள் தான் அரபி மொழியின் மேன்மைக் குறித்து எடுத்துரைக்கப்படக் கூடும் என்று நான் நினைத்தேன். ஆனால்,நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவோ மிகவும் ஞானம் மிக்கதாகவும், தத்துவ ரீதியிலும் மிகவும் மேன்மையானதாகவும் இருந்தது. நான் இந்த சொற்பொழிவின் ஒவ்வொரு சொல்லையும் மிகவும் கவனத்துடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும்

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

செவியுற்றேன். நான் இதலிருந்து மிகவும் இன்பமுற்றேன்; மேலும் பயனடைந்தேன். இந்த சொற்பொழிவின் தாக்கம் நீண்ட காலம் வரை என்னுடைய உள்ளத்தில் நிலைபெற்றிருக்கும் என்று நான் நம்புகின்றேன். நான் மிர்ஸா ஸாஹிப் அவர்களுக்கு இதற்கான உறுதியளிக்கின்றேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களோ உலகக் கல்வியைப் பொருத்த வரை பிரைமரி கூட தேர்ச்சி பெறவில்லை. அல்லாஹ் வாக்குறுதி அளித்தது போன்று ஞானத்தால் அன்னாரை நிரப்பினான். இதனை அந்நியர்களாலும் கூட புகழாமல் இருக்க முடியவில்லை.

ஓர் அமெரிக்க பாதிரியுடைய தாக்கத்தைக் கேளுங்கள்; பானிபட்டைச் சேர்ந்த ஷேக் இஸ்மாயீல் ஸாஹிப் கூறுகின்றார்: சிம்லாவைச் சேர்ந்த மவ்லவி உமருத்தீன் ஸாஹிப் அவர்கள் ஒருமுறை ஒரு சம்பவத்தை என்னிடம் கூறினார்கள். அது என்னவென்றால், ஹுஸுர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆகி சில மாதங்கள் தான் கழிந்திருந்தன. அதாவது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் 1914-ம் ஆண்டு கிலாஃபத்தில் அமர்ந்து சில மாதங்களுக்கு பிறகு அமெரிக்காவின் ஒரு மிகப் பெரிய பாதிரியார் காதியானிற்கு வந்தார். அவர் தேர்ச்சிப் பெற்ற பெரும் அறிஞராகவும் இருந்தார். தன்னுடைய கல்வி மற்றும் அறிவின் மீது அவர் மிகவும் பெருமையும் கொண்டிருந்தார். காதியான் வந்த பிறகு அவர் எங்களுக்கு முன்னால் மார்க்கம் தொடர்பான சில கேள்விகளை எடுத்து வைத்தார். அவை மிகவும் நுட்பமானவையாகவும், முக்கியத்துவம் கொண்டவையாகவும் இருந்தன. நான் அமெரிக்காவிலிருந்து இங்கு வரை வந்துள்ளேன். நான் முஸ்லிம்களின் ஒவ்வொரு சபையிலும் அமர்ந்து இந்தக் கேள்விகளை கேட்டுள்ளேன். ஆனால், இன்று வரை எந்தவொரு முஸ்லிம் அறிஞராலும், தேர்ச்சிப் பெற்ற ஆலிமாலும் எனக்கு திருப்தி அளிக்கின்ற பதிலை கொடுக்க முடியவில்லை என்றும் அவர் கூறினார். நான் இந்த கேள்விகளை உங்களின் கலீஃபாவிற்கு முன்னால் எடுத்து வைப்பதற்காக இங்கு வந்துள்ளேன்; கலீஃபா ஸாஹிப் அவர்கள் இந்த கேள்விகளுக்கு என்ன பதில் கொடுக்கின்றார்கள்? என்று பார்ப்போம் என்று அவர் கூறினார்.

இந்த சம்பவத்தை எடுத்துரைக்கக் கூடியவர் கூறுகின்றார்: கேள்விகள் எந்த அளவிற்கு சிக்கலானவையாகவும், விநோதமானவையாகவும் இருந்தன என்றால், அப்போது எனது சிந்தனையில் இந்த எண்ணம் தோன்றியது. அதாவது ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் தற்போது முற்றிலும் இளைஞராக இருக்கின்றார்கள்; இறையியில் தொடர்பாக அன்னார் (ரலி) எந்த முறையான கல்வியையும் பெற்றிருக்கவில்லை ; வயதோ மிகவும் குறைவாக இருக்கின்றது. அனுபவமும் குறைவுதான். இந்தக் கேள்விகளுக்கு அன்னாரால் ஒருபோதும் பதில் கொடுக்க முடியாது என்று நான் உறுதியாக நம்பினேன். இவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிகவும் அவப் பெயர் ஏற்பட்டு விடும்; மேலும் முழு உலகிலும் அவமானம் உண்டாகி விடும் என்றும் நான் கருதினேன். ஏனெனில், ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களால் இந்தக் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாமல் போய்விட்டால் பின்னர் அந்த அமெரிக்க பாதிரியார் திரும்பிச் சென்று அஹ்மதிகளின் கலீஃபாவுக்கு எதுவும் தெரியவில்லை ; கிறிஸ்தவத்திற்கு எதிராக நிற்க முடியாது. அவர் பெயரளவில் மட்டுமே கலீஃபா ஆவார். அவர் எந்தவோர் அறிவையும் கொண்டிருக்கவில்லை என்று முழு உலகிலும் பிரச்சாரம் செய்வார் என்று நான் கருதினேன்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: இந்த வகையில் நான் மிகவும் கவலைக்குள்ளானேன். அந்த அமெரிக்கப் பாதிரியார் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களை சந்திக்க வேண்டாம் ;மேலும் அவர் அப்படியே திரும்பிச் சென்று விடட்டும் என்பதற்கும் நான் முயற்சி செய்தேன். ஆனால் இந்த முயற்சியில் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை. நான் கலீஃபா ஸாஹிப் அவர்களை சந்தித்து விட்டுத்தான் செல்வேன் என்று அந்த அமெரிக்க பாதிரியார் பிடிவாதம் பிடித்து விட்டார். எனவே நான் ஹுஸுர் அவர்களிடம் சென்று, ஓர் அமெரிக்க பாதிரியார் வந்திருக்கின்றார்; அவர் உங்களிடம் சில கேள்விகளை கேட்க விரும்புகின்றார்.தற்போது என்ன செய்வது? என்று கேட்டேன். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எந்த தயக்கமும் இன்றி, எவ்வித தாமதமும் இன்றி அவரை அழையுங்கள் என்று கூறினார்கள். எனக்கு வேறு வழியின்றி அவரை நான் அன்னாரிடம் அழைத்துச் சென்றேன். இருவருக்குமிடையில் மொழியாக்கம் செய்பவராக நானே இருந்தேன். அந்த பாதிரியார் ஆங்கிலத்தில் பேசினார். அன்னார் (ரலி) உருதுவில் பதில் கொடுத்தார்கள். அதாவது, இவர் மொழியாக்கம் செய்தார்.

அவர் கூறுகின்றார்: அமெரிக்க பாதிரியார் சிறிது சம்பிரதாயமான பேச்சுக்குப் பிறகு தனது கேள்விகளை ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுக்கு முன்னால் எடுத்து வைத்தார். அதன் மொழியாக்கத்தை நான் எடுத்துரைத்தேன். அன்னார் (ரலி) மிகவும் அமைதியுடன் அந்தக் கேள்விகளைக் செவிமடுத்தார்கள். பிறகு, அந்தக் கேள்விகளுக்கு திருப்தி அளிக்கக் கூடிய எவ்வாறான பதில்களை கொடுத்தார்கள் என்றால் அவற்றை கேட்டு விட்டு எனக்கு மிகவும் வியப்பு ஏற்பட்டு விட்டது. இந்தக் கேள்விகளுக்கு ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் ஈடு இணையற்ற ஞானம் மிகுந்த பதில்களை வழங்குவார்கள் என்று எனக்கு ஒருபோதும் நம்பிக்கை இருக்கவில்லை. நான் இந்த பதில்களை ஆங்கிலத்தில் அமெரிக்க பாதிரியிடம் எடுத்துக் கூறியபோது அவரும் ஆச்சரியத்தில் உறைந்து விட்டார். நான் இன்று வரை இவ்வாறான அறிவுப்பூர்வமான பதில்களை, சான்றுகளைக் கொண்ட கருத்துகளை எந்தவொரு இஸ்லாமிய அறிஞரிடமிருந்தும் நான் கேட்டிருக்கவில்லை. உங்களின் கலீஃபா மாபெரும் அறிஞர் ஆவார். மார்க்க உலகில் மிகவும் ஆழமான பார்வை கொண்டவராக அன்னார் இருக்கின்றார்கள் என்று அவர் கூறிவிட்டு மிகவும் பணிவுடன் ஹஸ்ரத் ஸாஹிப் (ரலி) அவர்களின் கரத்தை முத்தமிட்டார். பின்னர் திரும்பிச் சென்று விட்டார். முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது என்பதற்கு இது மகத்தான சான்றாக இருக்கின்றது.

கல்வியறிவில் தன்னை பெரும் அறிஞராக கருதியிருந்த ஒரு பாதிரி கூட இஸ்லாத்தின் மேன்மையை ஒப்புக் கொண்டு விட்டுச் சென்றார். நேரு அறிக்கையும், முஸ்லிம்களுக்கு நல்ல ஆலோசனையும் என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடைய ஒரு நூலைக் குறித்து கருத்து கூறக் கூடிய ஒருவர் இவ்வாறு கூறுகின்றார்: ஹுஸுர் (ரலி) அவர்கள் முஸ்லிம்களுக்கு தக்க நேரத்தில் வழங்கியதற்கு, மேல் வர்க்கம் நன்றிக் கடன்பட்டுள்ளது. முஸ்லிம்களுடைய அரசியல் வட்டாரத்தில் இது மிகவும் வரவேற்பைப் பெற்றது. பெரும், பெரும் முஸ்லிம் தலைவர்களும் இதனை பாராட்டியுள்ளனர். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் முஸ்லிம்களுக்கு மிகவும் அவசியமான காலகட்டத்தில் உதவி செய்துள்ளார்கள் என்று அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். பலர் ஹஸ்ரத் முஃப்தி முஹம்மத் ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களிடம் உண்மையான நடைமுறைப் பணியை உங்களுடைய ஜமாஅத்துதான் செய்கின்றது; மேலும் உங்களுடைய ஜமாஅத்தில் இருக்கின்ற கட்டமைப்பை வேறு எங்கும் காண முடியாது என்று கூறினர்.

கல்கத்தாவைச் சேர்ந்த தூய ஓர் அஹ்மதி மிஸ்டர் தவ்லத் அஹ்மத் கான் ஸாஹிப் பி.ஏ எல். எல். பி. இவர் சுல்தான் என்ற பத்திரிகையில் ஜாயின்ட் எடிட்டராக இருந்தார். அந்த ஆலோசனைகளை வங்காள மொழியில் மொழியாக்கம் செய்து ஓர் அழகிய சிறு நூலாக வடிவமைத்து வெளியிட்டார். வங்காள மக்களுக்கு மத்தியில் அது பெரும் வரவேற்பைப் பெற்றது. ஒரு கண்ணியம் மிகுந்த அஹ்மதி அல்லாத ஒருவர், அந்த ஆலோசனையைப் படித்த பிறகு எந்த அளவிற்கு தாக்கத்திற்கு ஆளானார் என்றால் அவர் செகரட்டரி தஹ்ரீகே இஷாஅத்திற்கு இவ்வாறு ஒரு கடிதம் எழுதினார்: கலீஃபா ஸாஹிப் அவர்களை பார்க்க வேண்டும் என்று எனது உள்ளம் விரும்புகின்றது. அவர்களை தரிசிக்க விரும்புகின்றேன். ஏனெனில் எனது உள்ளத்தில் அன்னாருக்கு மிகுந்த மதிப்பு உள்ளது. எனவே தயவுகூர்ந்து தாங்கள் இந்த எளியவனின் ஸலாத்தை அன்னாருக்கு எட்ட வைத்து விடுங்கள். அபாயகரமான இந்தக் காலத்தில் இஸ்லாம் சென்று கொண்டிருக்கும்போது மிகவும் அழகிய முறையில் அதனை காப்பாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். மார்க்க ரீதியில் மட்டுமின்றி அரசியல் ரீதியிலும் முஸ்லிம்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றீர்கள். நேரு அறிக்கை தொடர்பான தங்களது கருத்தை நான் படித்தேன். இது தங்கள் மீதான கண்ணியத்தை மேலும் அதிகரிக்கச் செய்து விட்டது. நான் தங்களை ஒரு மாபெரும் மார்க்க அறிஞராக கருதிக் கொண்டிருக்கும் அதேவேளையில் நான் தங்களை ஓர் அரசியல் வல்லுநராகவும் கருத ஆரம்பித்துவிட்டேன் என்று கலீஃபா ஸாஹிபிடம் தெரிவித்து இந்த தொண்டனின் சார்பாக வாழ்த்துகளை ஏற்றுக் கொள்ளும்படி விண்ணப்பம் வையுங்கள் என்று அவர் கூறியுள்ளார்.

ரியாஸத் என்ற பத்திரிகை 1930-

#12 KNG Garden
sundakamuthur main Road,
Kuniyamuthur,
Coimbatore-641008
93632 27227
succesraoof@gmail.com
SUCCESS INDIA
PROMOTERS
M. Abdul Raoof
936322729

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 28 MARCH 2024 Issue No.13

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

களில் லாஹூரிலிருந்து வெளியாகி வந்தது. 1930 டிசம்பர் 2-ம் தேதி பிரதியில் அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. மார்க்க வேறுபாடுகள் தொடர்பான விஷயங்களை விட்டுவிட்டுப் பார்க்கும்போது ஜனாப் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் எழுத்துக் களத்தில் செய்த பணி அது அளவைப் பொருத்த வரையிலும் பயனைப் பொருத்த வரையிலும் எல்லா வகையிலும் பாராட்டுக்குரியதாக இருக்கின்றது. அரசியலில் தமது ஜமாஅத்தை பொது முஸ்லிம்களுக்கு துணையாக நடத்திச் செல்வதில் அன்னார் எந்த அடிப்படை விஷயங்களை துவங்கி வைத்து தமது தலைமையில் வெற்றிகரமாக அதனை நிரூபித்துக் காட்டினார்கள் என்றால் அது நீதியை விரும்பக் கூடிய ஒவ்வொரு முஸ்லிமிடமிருந்தும், உண்மையை தேடக் கூடிய ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் பாராட்டு மடலைப் பெற்றுத் தருகின்றது.

அன்னாருடைய அரசியல் தொலைநோக்குப் பார்வையை ஓர் உலகமே ஒப்புக் கொள்கின்றது. நேரு அறிக்கைக்கு எதிராக முஸ்லிம்களை ஒன்று திரட்டுவதில் சைமன் கமிஷனுக்கு எதிரே முஸ்லிம்களின் கண்ணோட்டத்தை எடுத்து வைப்பதிலும், தற்காலத்தில் உள்ள பிரச்சனைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்துடன் சான்றுகளைக் கொண்டு விவாதிப்பதிலும், முஸ்லிம்களின் உரிமைகளை சான்றுகளைக் கொண்டு எடுத்துரைப்பதிலும், நூல்களை எழுதுவதிலும் அதாவது சான்றுகளால் நிறைந்த நூல்களை எழுதுவதிலும் அன்னார் மிகவும் பாராட்டத்தக்க பணிகளை செய்துள்ளார்கள். சைமன் ரிப்போர்ட் குறித்து மிர்ஸா ஸாஹிபின் விமர்சன ஆய்வுக் கட்டுரையைக் குறித்து நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். அது ஆங்கிலேய மொழியில் எழுதப்பட்டுள்ளது. அதனைப் படித்துப் பார்க்கும்போது அன்னாருடைய நுட்பமான அறிவை நம்மால் கணித்துப் பார்க்க முடிகிறது. அன்னார் விவரிக்கும் முறை எளிமையானதாகவும், ஒப்புக் கொள்ள வைக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. அன்னாருடைய சொல் நடை மிகவும் தூயதாகவும் இருக்கின்றது.

ஈராக்கின் நிலவரத்தைக் குறித்து லாஹூரிலிருந்து ஆல் இன்டியா ரேடியோ ஸ்டேஷனில் அன்னார் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அது குறித்து கூறப்பட்டக் கருத்தை நாம் பார்க்கலாம். ஈராக்கின் நிலவரம் குறித்து அன்னார் (ரலி) ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அது ஆல் இன்டியா ரேடியோ ஸ்டேஷன் லாஹூரிலிருந்து மே 25, 1941 ல் ஒலிபரப்பு செய்யப்பட்டது. இந்த சொற்பொழிவிற்கு தூண்டு கோலாக இருந்த விஷயம் என்னவென்றால் இரண்டாம் உலகப் போரின்போது ஜெர்மனி மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் ஈராக்கில் தாக்குதல் தொடுத்தன. டெல்லியில் பிரபலமான சீக்கிய பத்திரிகையான ரியாஸத்தில் ஜூன் 2, 1941ல் இது குறித்து கருத்து எழுதப்பட்டது. அடிமையான சமுதாயங்கள் மற்றும் அடிமையான நாடுகளுடைய மிகவும் பலவீனமான அம்சம் என்னவென்றால் அவர்களுடைய மக்கள் உண்மை மற்றும் துணிவு போன்ற நல்லொழுக்கத்தை விட்டு விலகிச் சென்று விடுகின்றனர். முகஸ்துதி மற்றும் பொய்யான பாராட்டு, கோழைத்தனம் ஆகிய மனநிலை அவர்களிடத்தில் மேலோங்கி விடுகின்றன. ஈராக்கினுடைய ரஷீது அலியே உதாரணமாகக் கூறப்படுகின்றார். பிரிட்டன் அரசாங்கம் அல்லது பிரிட்டன் மக்களுடைய கண்ணோட்டத்தில் ரஷீது அலி தவறிழைத்தவராக இருக்கலாம் அல்லது பிரிட்டனுடன் போர் செய்வது பொருத்தமற்றதாக இருக்கலாம். ஆனால், இந்த நபர் தனது நாட்டினுடைய அரசியல் விடுதலைக்காக போரிட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதை மறுக்க முடியாது. மேலும் எந்த வகையிலும் தனது நாட்டினுடைய துரோகி என்று கூறமுடியாது. ஆனால், நம்முடைய அடிமை நாட்டினுடைய ஆளுநர்கள் மற்றும் தலைவர்களுடைய குணநலன்களைப் பாருங்கள்; அவர் ஈராக்குடைய தலைவரைக் குறித்து சொற்பொழிவு நிகழ்த்துகின்றார்; மேலும் ரஷீது அலியை துரோகி என்று கூறுகின்றார். அந்தத் தலைவர் போரைப் பற்றிக் குறிப்பிடும்போது, முதலில் ரஷீது அலியை துரோகி என்று குறிப்பிட்டு விட்டு தனது கருத்தை துவங்குகின்றார். இந்த முஸ்லிம்களிடத்தில் இருக்கக் கூடிய தலைவர்கள் குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளின் தலைவர்களின் குணநலன்கள் எவ்வாறு உள்ளது? என்றால், அடிமைத்தனத்தின் காரணமாக அவர்கள் எந்த அளவிற்கு துணிவிழந்து போய் விட்டனர் என்றால் அவர்கள் பொய் புகழுரை மற்றும் முகஸ் துதி ஆகியவற்றைதான் நாட்டிற்கு அல்லது அரசாங்கத்திற்கு ஆற்றும் தொண்டாக கருதிக் கொண்டிருக்கின்றனர். நம்முடைய நாட்டினுடைய மூடத்தனமான புகழுரைக்கு மத்தியில் காதியானுடைய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் துணிவு,உயர்ந்த குணநலன்கள் மற்றும் தெளிவான கூற்று ஆகியவை ஈர்க்கக் கூடியத் தன்மை கொண்டவையாகவும், மகிழ்ச்சியளிக்கக் கூடியவையாகவும் உணரப்படுகின்றன. கடந்த வாரம் ரேடியோவில் ஒரு சொற்பொழிவில் அதனை அன்னார் (ரலி) வெளிப்படுத்தி இருந்தார்கள். சமுதாயத்தை சிறைவாசத்திலிருந்து விடுதலைப் பெறச் செய்வதற்காக அன்னார் (ரலி) செய்த ஒரு முயற்சியாக அது இருந்தது.

மவ்லானா முஹம்மது அலி ஜவ்ஹர் ஸாஹிப் என்பவர் 1878 ஆம் ஆண்டு பிறந்தார். அவர் 1931-ம் ஆண்டு மரணமடைந்தார். ராம்பூர் என்ற இடத்தில் பிறந்தார்கள்.கல்கத்தாவில் காம்ரேட் என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார்கள். டெல்லியில் ஹம்தர்த் என்ற பெயரில் உருதுவில் பத்திரிகை ஒன்றை துவங்கினார்கள். 1921-ம் ஆண்டில் டெல்லியில் ஆல் இன்டியா கான்ஃபிரன்ஸின் தலைவராக ஆக்கப்பட்டார்கள். வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றிருந்தார்கள். 1931-ம் ஆண்டு ஜனவரி 5ம் தேதி அன்று அங்கே அன்னார் மரணமடைந்தார்கள். பாகிஸ்தான் உருவாக்கம் மற்றும் கட்டமைப்பு அதனுடைய முன்னேற்றம் போன்றவற்றில் ஒவ்வொரு நிலையிலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் தொண்டுகள் தெளிவாக இருக்கின்றன.

அன்னார் கூறுகின்றார்கள்: அஹ்மதிகள் என்ன செய்தார்கள்? என்று கூறக் கூடியவர்கள் இருக்கின்றனர். பாருங்கள்! அஹ்மதிகள் செய்தது பகிரங்கமான தொண்டுகள் என்று அந்நியர்கள் கூட அவற்றை ஒப்புக் கொள்கின்றனர்.ஆனால், மவ்லானா ஜவ்ஹர் அலி ஸாஹிப் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தை தம்முடைய ஹம்தர்த் என்ற பத்திரிகையில் 1976-ம் ஆண்டு செப்டம்பர் 26-ல் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஜனாப் பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் மற்றும் அன்னாருடைய ஜமாஅத்தின் கட்டமைப்பை இந்த வரிகளில் குறிப்பிடவில்லையென்றால் அது நன்றிக் கேடாக ஆகிவிடும். அன்னார் தமது அனைத்து சிந்தனைகளையும் எவ்வித கொள்கை வேறுபாடுகளுமின்றி அனைத்து முஸ்லிம்களின் நலனுக்காகவும் அர்ப்பணித்து இருந்தார்கள். (தொடரும்.....)

* * * * *

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad